விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு
Valampurii
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 24 திங்கட்கிழமை (08.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 79

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## நாடுகடந்த தமிழீழ அரசு அமையமுன் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### இந்தியாவின் திட்டம் இது என்கிறது லங்காதீப

(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ அரசுக்கு சர்வதேச ரீதியில் கிடைக்கக்கூடிய அங்கீகாரத்தை தடுப்பதற்கு உடனடியாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதே சிறந்த வழி எனக் கருதும் இந்தியா, அதற்காகவே நிருபமாராவை அவசரமாக இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளதாக லங்காதீப சிங்கள நாளிதழ் தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து செயற்படும் வி.உருத்திரகுமாரனின் தலைமையில் எடுக்கப்பட்டு வரும் நாடுகடந்த தமிழீழ அரசு குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்த இந்தியா, இந்தக் கட்டமைப்பை தகர்ப்பதற்கு இனப்பிரச்சினைக்கானத் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் பொன்சேகா உண்ணாவிரதம்

(கொழும்பு)

தொலைபேசி ஊடாக தமது பிள்ளைகளுடன் உரையாட அனுமதி வழங்குமாறு கோரி ஜெனரல் சரத் பொன்சேகா சாகும் வரை உண்ணா விரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இதனை நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவரது மனைவி தெரிவித்துள்ளார். தற்போது வெளிநாட்டில் தங்கியுள்ள தமது (16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி மகிந்தவின் மீள் வெற்றி இராஜதந்திர உறவுகளுக்குப் பலம்

## நிருபமா ராவ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீளவும் தெரிவு செய்யப்பட்டமையானது இந்தியா-இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்தும் என இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து உரையாடும் போதே அவர் இதனைக் கூறினார்.**

இலங்கைக்கு நேற்று முன்தினம் இரவு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அஷோக் கே.காந்தா இலங்கை (16ஆம் பக்கம் பார்க்க)



இந்தியவெளியுறவுச் செயலர் நிருபமா ராவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்பதை படத்தில் காணலாம்

## வடக்கு-கிழக்குக்கு அதிகாரம் வழங்கும் அரசியல் யாப்புக்கு ஐ.தே.கூட்டணி எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குக்கு அதிகாரம் வழங்கல் குறித்த யோசனை உள்ளடக்கப்பட்டு புதிய அரசியல் யாப்பு அமைக்கப்படுமானால் அதனை எதிர்க்கப்போவதாகவும் இந்த நாட்டினை மீண்டும் துண்டாடுவதற்கு இடமளிக் கப்போவதில்லை'எனவும் ஜனநாயக தேசிய கூட்டணியின் அங்கத்தவரும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினருமான அனுரகுமார திஸ்ஸநாயக்க குறிப்பிடுகிறார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் பொன்சேகாவின் அலுவலகத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் நேற்று இடம் பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறியதாவது, அரசாங்கம் (16ஆம் பக்கம் பார்க்க)


## தனுனவின் வங்கிக்கணக்கு முடக்கம்! நீதிமன்றம் செல்ல ஜே.வி.பி. திட்டம்

(கொழும்பு)


சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரத்ன நீதிக்குப்புறம்பான வகையில் நிதி திரட்டியதாக கூறப்பட்டுள்ள விடயம் தொடர்பாகவே தாம் நீதிமன்றம் செல்லவிருப்பதாகவும் அந்த நிதி யாரால் கொடுக்கப்பட்டது எங்கிருந்து கிடைத்தது போன்ற விபரங்களை நீதிமன்றில் முன்வைக்கப் போவதாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், நிதி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்னமற்றும்அவரதுதாயாரின்28 வங்கிகணக்குகள் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளன. (ச-5)



## பேசும் படம்



புனரமைப்பு நடக்கும்...! ஆனால் நடக்காது!!

# சட்டரீதியாக தவறிழைக்கவில்லை சுவாமி நித்தியானந்தர் அறிவிப்பு



(பெங்களூர்)

என்மீது வேண்டும் என்றே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நான் எந்த தவறான செயல்களிலும் ஈடுபடவில்லை. தவறான குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆணித்தரமான ஆதாரங்களை திரட்டி வருகிறேன். இதனை நான் மக்கள் முன் திறந்து வைக்கிறேன் என்றும் பாலியல் குற்றச்சாட்டில் சிக்கிய நித்தியானந்த சுவாமி வீடியோ மூலம் செய்தி அனுப்பியுள்ளார்.

இவ்வளவு அவதூறுக்கு மத்தியிலும் இவருக்கு உலகம் முழுவதும் இருந்தும் பெரும் அளவில் ஆதரவு குவிந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். அவரது வீடியோச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் எந்த ஒரு தவறும் செய்யவில்லை என ஆணித்தரமாக சொல்லிக்கொள்கிறேன். நானோ எனது தியான பீடமோ எவ்வித தவறான செயல்களிலும் ஈடுபடவில்லை. எனது சோதனையான இந்த காலகட்டத்தில் எனது சிஷ்யர்கள், எனது நல விரும்பிகள் எனக்கு உலகம் முழுவதும் பக்கபலமாக இருந்து வருகின்றனர்.

நான் கடந்த பல ஆண்டுகளாக உலகம் முழுவதும் நல் வித்துக்களை பரப்பியுள்ளேன். இதன் காரணமாக எனக்கு இந்த ஆதரவு இருக்கிறது என ஆணித்தரமாக சொல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். வதந்திகளையும், செய்திகளையும் அறிவீர்கள்.

எல்லாவற்றையும் திரட்டி எல்லா உண்மைகளையும் நான் உங்கள் முன்பு திறந்து வைக்கிறேன். எல்லோரும் பொறுமையாக இருங்கள். யாரும் தவறான முடிவுக்கு வர வேண்டாம். நான் சட்ட ரீதியான எவ்வித தவறும் செய்யவில்லை. எனக்கு ஆதரவாக இருந்து வரும் அனைவருக்கும் மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ச-5)

# ஜனாதிபதித் தேர்தல் நடந்த அன்றுமாலை தேர்தல் ஆணையாளர் எங்கிருந்தார்?

## சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் கேள்வி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற கடந்த ஜனவரி 26ஆம் திகதியன்று மாலை 3.30 முதல் 27ஆம் திகதி மாலை 4மணிவரை தான் இருந்த இடத்தை முடியுமானால் மக்களுக்கு வெளியிடுமாறு சிரேஷ்ட சட்டத்தரணி எல்மோ பெரேரா தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவுக்கு சவால் விடுத்துள்ளார்.

குறித்த காலப் பகுதியில் தேர்தல் ஆணையாளர் தனது வீட்டிலோ, தேர்தல் செயலகத்திலோ இருக்கவில்லை எனவும் எல்மோ பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

2000ஆம் ஆண்டு வாக்குப் பெட்டிகள் விஷேட ஸ்டிக்கரை ஒட்டுவதில் ஏற்பட்ட நெருக்கடி நிலையில்தான் அவர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியதாகவும் நேர்மையான நபர் என்ற உணர்வில்தான் அவரைப் பாதுகாத்ததன் மூலம் தவறிழைத்துள்ளேன் என்ற எண்ணம் முதற்தடவையாக தனக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் தேர்தல் ஆணையாளரின் செயற்பாடுகள் தொடர்பான தனது எதிர்ப்பை விபரித்து சகல விடயங்களையும் உள்ளடக்கி கடிதமொன்றைக் கையளிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் சிரேஷ்ட சட்டத்தரணி எல்மோ பெரேரா மேலும் கூறியுள்ளார். (ச-5)


# இந்திய வெளிவிவகார செயலாளருடன் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமாராவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின் போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள்குடியமர்த்துதல், புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளுக்கு இந்தியாவின் தொடர்ச்சியான பங்களிப்பின் அவசியம் குறித்தும் தமிழ் இளைஞர்களுக்கு குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான திறன்விருத்தி தொழிற்பயிற்சி செயற்திட்டங்களுக்குத் தேவையான பயிற்சிகளை இந்தியாவில் வழங்குதல்,

மற்றும் உள்ளூரில் அவ்வாறான நிறுவனங்களை நிறுவி அதற்கான போதனாசிரியர்களையும் இந்தியாவே வழங்கி உதவ வேண்டும் என்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்த ஒரு நிறுவனத்தை வடக்கில் நிறுவுவதன் அவசியம் குறித்தும்,

இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் தென்னிந்தியாவில் இருக்கும் தமிழ் மக்களை விரைவில் மீளக்குடியமர்த்துவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார். (ச-5)







யாழ்.குடாநாட்டில் பாலை தீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த வழிபாட்டு ஆராதனைகள் 5வருட இடைவெளியின் பின் நேற்றும், நேற்றுமுன்தினமும் இடம்பெற்றது. இவ் நிகழ்வில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதையும், பக்தர்களுக்கு அருட்தந்தை ஆசி வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சுதாகர்)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிருபமா ராவை சந்தித்துப் பேச்சு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவை சந்தித்து பேச்சு நடத்தினர். இப் பேச்சுவார்த்தையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது வன்னிப் போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என கூட்டமைப்பினர் இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தினர். அத்துடன் திருகோணமலை, சம்பூர் அனல் மின்சார திட்டம் காரணமாக அங்கு பூர்வீகமாக வசித்த மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்துள்ளமையையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதேவேளை பொதுத்தேர்தல் முடிபடைந்ததும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியா முனைப்புடன் செயற்பட வேண்டும் எனவும் கூட்டமைப்பினர் நிருபமா ராவிடம் கேட்டுக்கொண்டனர். (ச-5)

# மனோ கணேசனின் வாகனம் வழி மறிக்கப்பட்டுத் தாக்குதல்

பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் வாகனம் தாக்கப்பட்டுள்ளது. கண்டி நாவலப்பிட்டி பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதன் போது வாகனத்திலிருந்த தேர்தல் பதாகைகள், சுவரொட்டிகள் என்பன கிழித்தெறியப்பட்டுள்ளன. அத்துடன் வாகனத்தின் சாரதியும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின் பின்னணியில் அரசின் அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகேயின் அடியாட்களே தாக்குதலில் ஈடுபட்டதாக மனோ கணேசன் குற்றம் சாட்டியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக அவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (ச-9)

## மரண அறிவித்தல்

### வடிவேலு பார்வதிப்பிள்ளை (சீனியம்மா)

காரையடி புலோலி தெற்கு புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு பார்வதிப்பிள்ளை (சீனியம்மா) தனது 98-வது வயதில் 07/03/2010 நேற்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08/03/2010இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 9.00 மணியளவில் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : கோ.நடராஜா
நாவலர் புத்தகசாலை, மந்திகை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-4622)

## விற்பனைக்கு

அரபு நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட A4 போட்டோ கொப்பி மெஷின் (Sharp Machine) விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 4047826

(849)

## விற்பனைக்கு

கந்தரோடை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குப் பின்னால் 12பரப்பு வயற்காணியும், அருளானந்தம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் குடாரை வயற்காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0776660532
(மாலை 5 மணிக்குப்பின்)

98, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(846)

## கோகுல் ரவல்ஸ் Hokul Travels











திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-
021 222 8984, 077 3747825, 077 6152992

(C-4449)

# இன்று ஒரு தகவல்

## புண்ணியதீர்த்தம்

ஒரு பெரிய மனிதர் இருந்தார். மிகவும் வசதியானவர். ஒரு நாள் புண்ணிய ஸ்தலங்களுக்கான யாத்திரையை மேற்கொண்டார். போகும் இடங்களிலெல்லாம் சமையல் செய்து சாப்பிடுவதற்காக தன்னுடைய வேலைக்காரனையும் அழைத்துக் கொண்டு போனார்.

ஒரு வருடம் முழுவதும் எங்கெங்கேயோ சுற்றினார்கள். புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் போனார்கள். புனிதமான தீர்த்தங்களிலெல்லாம் நீராடினார்கள்.

கடைசியாக வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். வந்து சேர்ந்தவுடன் அந்த வேலைக்காரன் சமையல் செய்தான்.

அந்த பெரிய மனிதரை உட்கார வைத்து சாப்பாடு போட்டான்.

அவர் சாப்பிட ஆரம்பித்தார். ஆனால் தொடர்ந்து சாப்பிட முடியவில்லை. சாப்பாட்டில் ஒரு மாதிரியான வாசனை! மோசமான வாசனை.

“என்னடா சமையல் இது?” என்று சத்தம் போட்டார். அவன் மெதுவாக வந்து அவர் முன்னால் நின்றான்.

“புனிதமான காய்கறிகளை உங்களுக்கு இன்றைக்கு சமைத்துப் போட்டிருக்கிறேன்” என்றான்.

“என்னடா சொல்கிறாய்?” என்றார்.

அவன் மெதுவாக விபரம் சொல்ல ஆரம்பித்தான்.

“அது வந்து... ஐயா... நாம் இங்கிருந்து புறப்படும் போது நம்முடன் கொஞ்சம் உருளைக்கிழங்கையும் எடுத்துக் கொண்டு வந்தேன். நாம் நீராடிய போதெல்லாம் நான் இந்த உருளைக் கிழங்குகளை புண்ணிய தீர்த்தங்களில் குளிப்பாட்டினேன்.

கங்கை, யமுனை, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடிய உருளைக்கிழங்கைத்தான் இன்றைக்கு உங்களுக்குச் சமைத்துப் போட்டேன்” என்றான்.

“என்னடா... இது இப்படிச் செய்துவிட்டாயே?” என்றார்.

“இதெல்லாம் அசுத்தமானது இல்லை. மிகவும் பரிசுத்தமானது! எல்லா நதிகளிலும் நீராடிய இது அசுத்தமென்றால்... எல்லா தீர்த்தங்களிலும் நீராடிய நீங்களும் அசுத்தமானவரா?” என்று கேட்டான்.

அந்தப் பெரிய மனிதனுக்குப் புத்தி வேலை செய்ய ஆரம்பித்தது.

“தீர்த்தங்களில் நீராடுவதால் மட்டும் யாரும் புனிதமடைந்திட முடியாது” என்ற உண்மையை அந்த வேலைக்காரன் மூலமாகப் புரிந்து கொண்டார்.

உடல் சுத்தமாகும் அதேநேரத்தில் மனமும் சுத்தமாக வேண்டும்.

அப்பொழுதுதான் மனிதனாக வாழ முடியும்.

தெய்வமாக உயர முடியும்.

ஒரு புண்ணிய ஷேத்திரம். அங்கே ஒரு தீர்த்தம். அதில் ஒருத்தன் ஒரு நாள் முழுவதும் முழுகி எழுந்திருந்தான். அதன் பின் கரையேறி வந்தான். கரையில் உட்கார்ந்திருந்த ஒரு மகானிடம் ஈரத்துணியுடன் வந்து நின்றான்.

“சுவாமி... நான் கடைத்தேறுவதற்கு வழி சொல்லுங்கள்” என்றான் மிகவும் பணிவாக.

“அதுதான்... புண்ணிய தீர்த்ததில் நீராடி விட்டாயே. பாவமெல்லாம் தொலைந்தது... போயிட்டு வா....” என்றார்.

“தொலைந்தது பாவம் இல்லை சாமி...என் சம்சாரத்தின் தங்கச் சங்கிலி. நேற்றைக்கு இங்கே வந்து முழுகும் போது தொலைந்துவிட்டது. அதைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தால்தான் சாப்பாடு என்று சொல்லிவிட்டா! அதுதான் இன்று காலையிலிருந்து அதே இடத்தில் முழுகி முழுகி எழுந்திருக்கின்றேன். அகப்படும் வழியைக் காணோம்” என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நிகோட் திட்டத்தினால் வழங்கப்படும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவுதொகை (LHA)

(யாழ்ப்பாணம்)

தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின்(NECORD) ஊடாக மீள் குடியமர்ந்த குடும்பங்களிற்கு தலா 25ஆயிரம் ரூபா வாழ்வாதார உதவு தொகைக்கான அனுமதிக் கடிதம் மூன்றாவது நாளாக கரவெட்டி பிரதேச செலயக பிரிவுக்குட்பட்ட குடும்பங்களுக்கு இன்று திங்கட்கிழமை வழங்கப்படும்.

எனவே சகல பயனாளிகளும் உரிய நேரத்திற்கு தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிச் சான்றிதழ் பத்திரத்துடன் குடும்பப் பதிவு அட்டை மற்றும் வங்கி வைப்புப் புத்தகம் என்பவற்றோடு குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தங்கள் கையொப்பத்தினை இட்டு அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

அனுமதிக் கடிதங்கள் பின்வரும் இடங்களில் வழங்கப்படும்.

கிராம சேவையாளர் பிரிவு ஜே/ 348, ஜே/ 349, ஜே/ 350, ஜே/ 351, கரவெட்டிப் பிரதேச செயலர் அலுவலகம்.

ஜே /352, ஜே /353, ஜே/ 354, ஜே/ 355, ஜே/ 356, உடுப்பிட்டி தெற்கு பொது நோக்கு மண்டபம்.

ஜே/ 357, கரவெட்டி பிரதேச செயலாளர் அலுவலகம்.

ஜே/ 358, ஜே /359 உடுப்பிட்டி தெற்கு பொதுநோக்கு மண்டபம்.

ஜே /360, ஜே/ 361, ஜே/ 362 கரவெட்டி பிரதேச செயலர் அலுவலகம்.

ஜே /363, ஜே/ 364, ஜே/ 365, ஜே/ 366 இராஜ கிராமம் சனசமூக நிலையம்.

ஜே/ 367, ஜே/ 368, கிழவி தோட்டம் சனசமூக நிலையம்.

ஜே /369, ஜே/ 370, ஜே/ 371, ஜே/ 372, ஜே/ 373, ஜே/ 374 கவிதைக்கந்தன் கலாச்சார மண்டபம்.

ஜே/ 375, ஜே /376, ஜே/ 377, ஜே/ 378, ஜே/ 379, ஜே/ 380, ஜே/ 381 கரவெட்டி பிரசேத செயலர் அலுவலகம்.

ஜே/ 382 கிழவி தோட்டம் சனசமூக நிலையம். (2-4-6-ந)

# வெற்றிலை, புகையிலை பாவனையால் வாய்ப் புற்றுநோய் அதிகரிப்பு

## இலங்கை பற்சுகாதார நிறுவனம் தெரிவிப்பு

இலங்கையில் வாய்ப்புற்று நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வெற்றிலை மற்றும் புகையிலை என்பவற்றின் பாவனையே காரணமென இலங்கை பற்சுகாதார நிறுவனத்தின் வாய்நோய் சிகிச்சை விசேட நிபுணர் டாக்டர் பத்மா டி சில்வா தெரிவித்துள்ளார்.

வெற்றிலை மற்றும் புகையிலை போன்றவற்றை நீண்டநேரம் வாயினுள் வைத்திருப்பவர்களுக்கு வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளதென அவர் சுட்டிக்காட்டினார்.

வெற்றிலை, புகையிலை, பாக்கு, சுண்ணாம்பு போன்றவற்றுடன் மேலும் பலவற்றைச் சேர்த்து பயன்படுத்துவதற்கு மக்கள் பழகியுள்ளதாக பத்மா டி சில்வா குறிப்பிட்டார்.

பாமில் போன்றவற்றை உள்கொள்பவர்களுக்கு வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகுமென அவர் தெரிவித்தார்.

வெற்றிலை மற்றும் புகையிலை போன்றவற்றை உட்கொள்பவர்களுக்கு உடனேயே வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் குறைவாக உள்ளபோதிலும் காலம் கடந்தேனும் அவர்களுக்கு வாய்ப்புற்றுநோய் ஏற்படலாம் என வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.

நாளாந்தம் 7 அல்லது 8 தடவைகளுக்கு மேல் வெற்றிலை, புகையிலை போன்றவற்றை பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டுள்ளவர்கள் வாய்ப்புற்றுநோய்க்கு இலக்காகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் மேலும் கூறினார்.

இதேவேளை வாய்ப்புற்றுநோய் உள்ளிட்ட அனைத்து வாய்நோய்களுக்கும் இலவசமாக சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பற்சுகாதாரப் பிரிவின் பதில் பணிப்பாளர் சுமித் ஆனந்த தெரிவித்தார்.

இதற்காக பல்வேறு பகுதிகளிலும் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (2-4-6)



யாழ். நடேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவரும் British college of Higher Studies (Pvt) Ltd நிறுவனத்தின் இயக்குநருமான கு. செல்வேந்திரன், கல்லூரி அதிபர் பொ. அமிர்தலிங்கத்திடம் கணனியொன்றை அன்பளிப்பாக வழங்குவதையும் அருகில் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*08-03-2010*
*(மாசி 24 திங்கட்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 2.49 மணி வரை*
*கேட்டை பிற்பகல் 3.20 மணி வரை*
*இராகுகாலம் 7.54 - 9.24 மணி வரை*
*சுபநேரம் -12.24 - 1.54 மணி வரை*
*அட்டமி - நவமி*


| | |
|---|---|
| மேடம் | மனக்கவலை, கடின முயற்சி, ஆரோக்கியக் குறைவு, போசன சுகம். |
| இடபம் | மனோதைரியம், குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல், புதிய திருப்பம். |
| மிதுனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செய்தி, தேகநலன், விருந்துபசாரம். |
| கடகம் | புத்திரரால் கவலை, தாழ்ந்த சுபாவம், பணக்குறைவு, வேலைச்சுமை. |
| சிங்கம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தனவிரயம். |
| கன்னி | மனோதைரியம், உறவினர் வருகை, எடுத்த காரியம் கைகூடும், தனலாபம். |
| துலாம் | போனச சுகக்குறைவு, பயந்த சுபாவம், காரிய தாமதம், வீண் விவாதம். |
| விருச்சிகம் | பெரியோர் சந்திப்பு, வெகுமானம், தெளிந்த சிந்தை, போசன சுகம். |
| தனுசு | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, தொழில் நன்மை, இடமாற்றம். |
| மகரம் | நண்பர்கள் சந்திப்பு, குடும்பச் சுகம், சயன சுகம், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | தொழில் மேன்மை, உறவினர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், தனவருவாய். |
| மீனம் | உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, ஆன்றோர் சந்திப்பு, பிரயாணம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 70 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 110 | 120 | 100 |
| தக்காளி | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 35 |
| கோவா | 50 | 60 | 50 |
| கரட் | 80 | 90 | 80 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 50 |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | -- |
| பயிற்றங்காய் | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 400 |
| போஞ்சி | 100 | 110 | 90 |
| கத்தரி தம்புள்ள | 60 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |





யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர் சரா புவனேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும், மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும், பிரதம விருந்தினர் வெற்றிபெற்ற இல்லத்துக்கான வெற்றிக் கேடயத்தை இல்லத் தலைவனுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(பொன்னாலை)

மூளாய் –காளி கோயிலுக்குச் சமீபமாகவுள்ள தபால் பெட்டி வீதி கடந்த 40 வருடங்களாக புனரமைக்கப்படாமல் இருந்து வருகின்றது.

தபால்பெட்டி சந்தியிலிருந்து ஆரம்பித்து மூளாய் டச்சு வீதியில் செல்வா சனசமூக நிலையத்துக்குச் சமீபமாகச் சென்று மிதக்கும் குறித்த வீதியை தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இதுவரை புனரமைப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (2-49)

## வலி.மேற்கில் மீள்குடியேறிய மாணவர்க்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்

வலி.மேற்குப்பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறிய குடும்பங்களில் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத் துவிச்சக்கரவண்டிகள் அண்மையில் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக பாடசாலை அதிபர்கள் மூலம் சேகரிக்கப்பட்ட மாணவர் பெயர்ப்பட்டியலின் அடிப்படையிலேயே இத் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (2-49)

## சிக்கன அடுப்பு வழங்கல்

(வன்னி)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குள் மீள்குடியேறியவர்களுக்கு சிக்கன அடுப்பு வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு சட்டநாதர் வீதியிலுள்ள திவ்விய ஜீவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மின்சாரவசதியற்ற 200 குடும்பங்களுக்கே நல்லூர் பிரதேச செயலகத்தால் இச் சிக்கன அடுப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-30)

## புதிய மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் புதிதாக பதிவு செய்யப்பட்ட NPVI 2270 தொடக்கம் NPVI 2544 வரையான மோட்டார் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள் இத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றை மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் நேரில் வந்து உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து அலுவலக நாட்களில் பிற்பகல் 2மணிக்கு பின்னர் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ. பத்மநாதன் தெரிவித்துள்ளார். (6-4)

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்ட அமைதிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பால் நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக்குழு மற்றும் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனை ஆகியன இணைந்து இன்று திங்கட்கிழமை அமைதிப் பேரணி நிகழ்வினை கச்சேரி முன்பாக ஆரம்பித்து யாழ். நகரத்தில் முடிவு பெறும் வகையில் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு "பூரணத்துவம் மிக்க பெண்ணை உருவாக்குவதனூடாக பால் நிலை சமத்துவத்தை பேணுவோம்" என்ற கருப் பொருளை நோக்காகக் கொண்டு நடைபெறவுள்ளது.

மேலும் இந்நிகழ்வினை யாழ். அரசாங்க அதிபர் ஆரம்பித்துவைப்பதுடன் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வைத்தியர் திருமதி திருமகள் சிவசங்கர் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி உதய டி சில்வா ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ளதாகவும் இம் முன்னெடுப்பில் சமூக அங்கத்தவர் எல்லோரும் பங்களிப்பை வெளிப்படுத்துமாறும் நிகழ்வின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (6-4)




## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் பா.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் மற்றும் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் ஆசிரியை திருமதி லெஜினா குகதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தரும் ICBS கணனி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் வித்தியாலயத்தின் பழைய மாணவருமான க. சசிகுமார், நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை அதிபர் சி.ஞானேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

## பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த தங்கப்பதக்கம் வழங்கலுக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 2002/03, 2003/04, 2004/05 கல்வியாண்டில் கற்று வெளியேறிய பட்டதாரி மாணவர்களுக்கான பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வழங்குவதற்கான விண்ணப்பங் கள் சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து பல்கலைக்கழகத்தால் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கிடையில் விண்ணப்பங்களை உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்.பல்கலைக் கழகம், திருநெல்வேலி என்ற முகவரியில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.


பல்கலைக்கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்ட ஒருவருக்கு பதக்கமும் பீட மட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டவர்களுக்கு 5 தங்கப்பதக்கங்களும் வருடாந்தம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (2-29)

## வேலணையில் தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பு

(வேலணை)

வேலணை வங்களாவடி சந்திக்கும் ஊர்கவாற்றுறை வீதிக்கும் இடையிலான பிரதான தபாலகத்திற்கு அண்மையில் புதிதாக தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்துக்குரிய கோபுரம் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்றுவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக்கோபுரமானது லங்காபெல் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதன்மூலம் லங்காபெல் CDMA தொலைபேசி சேவையும், சண்டெல் CDMA தொலைபேசி சேவையும் நடைபெறவுள்ளதாகவும் குறிப்பிடப்படுவதுடன் 70m உயரத்தை கொண்ட கோபுரமாக அமைக்கப்பட்டு வருவதாக்வும் தெரிவிக்கப்படுகிறது. (4-22)


காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலய முற்றலில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நடைபெற்றக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றுவதையும், அருகில் ஆலயத்தின் பிரதம குருக்களான ஞானசம்பந்ததேசியர், சக வேட்பாளர் எஸ்.ஸ்ரீகஜன் உட்பட்டோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# ஷில்ப - 2010 தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தகச் சந்தை

## தொழில் முயற்சியாளர் தெரிவு செய்யப்படவுள்ளனர்

கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தக சந்தை ஷில்ப - 2010 நடத்தப்படவுள்ளது.

இத்தேசிய கண்காட்சியில் ஜனாதிபதி விருதுகளுக்குத் தகுதி பெறும் தொழில் முயற்சியாளர்கள் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்காகசி றிய மற்றும் நடுத்தர அளவுக் கைத் தொழிலாளர்கள், கைத்தொழில் துறையிலுள்ள சுயதொழிலாளர்கள் போன்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் நடுத்தர மற்றும் சிறிய அளவுக் கைத் தொழிலதிபர்கள், இலத்திரனியில் மற்றும் மின்சார உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திரப் பகுதிகள், உணவு மற்றும் பானங்கள், பாதணித் தோல் மற்றும் ஒத்த உற்பத்திகள், இலகுப்பொறியியல் மற்றும் பொறியியல் கைத்தொழில்கள், தும்பு மற்றும் நார் அடிப்படையிலான உற்பத்திகள், மரம் மற்றும் மரம் அடிப்படையிலான உற்பத்திகள், அச்சிடும் கடதாசி மற்றும் கடதாசிக் கூழ் அடிப்படையிலான உற்பத்திகள், கனிப் பொருட்கள் மற்றும் இரசாயன அடிப்படையிலான உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் அடிப்படையிலான உற்பத்திகள், கட்டிடம் மற்றும் கட்டிடப் பொருள் அடிப்படையிலான உற்பத்திகள், தைத்த ஆடைகள் மற்றும் ஒத்த உற்பத்திகள், வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள் போன்ற துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தக சந்தைக்கு தெரிவு செய்யப்படவுள்ள விண்ணப்பதாரர்களின் முதலீடு மற்றும் தொழில் உருவாக்கத்தின் கீழ் சுயதொழிலினை மேற்கொள்பவர்கள் ரூபா 7 இலட்சம் வரையான முதலீட்டினை சொந்த வியாபாரத்தில் மேற்கொள்ள வேண்டுமெனவும் சிறிய அளவு கைத்தொழிலாளர்கள் ரூபா 7 இலட்சத்தில் இருந்து 75 இலட்சம் வரையான முதலீட்டினையும் நடுத்தர அளவுக் கைத்தொழிலாளர்கள் ரூபா 75 இலட்சம் தொடக்கம் 5 கோடி ரூபா வரையில் உள்ள முதலீட்டினை உடையவர்களின் விண்ணப்பங்கள் பெறுமதியின் அடிப்படையில் வகைப்படுத்தப்படவுள்ளது.

போட்டியின்போது சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழிலாளர்கள் மாவட்ட ரீதியாக மதிப்பீட்டுக்குழுவால் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பரிசுகளை வென்றவர்களுக்கு சான்றிதழ்களும் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் மாகாண மட்ட மற்றும் தேசிய மட்டப் போட்டிகளுக்கும் தகுதியானவர்.

அவர்கள் யூலை மாதம் 22ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாடு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட கண்காட்சியில் பங்குபற்றுவதற்கும் தமது உற்பத்திப் பொருட்களை காட்சிக்கு வைப்பதற்கும் உரித்துடையவராவார்.

தேசிய தங்க விருதுகள் பெறும் தொழில் முயற்சியாளர்களுக்கு சான்றிதழ்களுடன் ரூபா 50 ஆயிரம் பணப் பரிசும் தேசிய வெள்ளி விருதுகள் பெறுபவர்களுக்கு 13 கைத்தொழில் துறை ரீதியாக தேசிய மட்டத்திற்கு தெரிவாகி 1ஆம் இடத்தைப் பெற்றவர்களிக்கு சான்றிதழ்களுடன் ரூபா 30 ஆயிரம்பணமும் பெறத் தகுதியானவர்.

அத்துடன் தேசிய மட்டப் பதங்கங்களில் 13 துறைகளிலும் 2ஆம், 3ஆம் இடத்தைப் பெற்றவர்களுக்கு வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்குவதுடன் முறையே ரூபா 20 ஆயிரம் மற்றும் ரூபா 15 ஆயிரம் பணமும் பெற உரித்தானவர்கள். மாகாண மட்டத்தில் முதலாமிடம் பெற்றவர்களிக்கு சான்றிதழ்களுடன் ரூபா 10 ஆயிரம் பணமும் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரர்கள் சுண்டுக்குழியில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதற்குரிய ஆவணப் பிரதிகளுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட தொழில் முயற்சி அபிவிருத்தி முகாமையாளர் கே. சசிகரன் கேட்டுக் கொள்கிறார். (2-6-4-30)

# கால்நடை வளர்ப்போர் சங்க விசேட பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட் டுறவுச் சங்கத்தினரின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக கேட்போர் கூட்டத்தில் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் மற்றும் கால்நடை உற்பத்திச் சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களான தென்மராட்சி கால்நடை வைத்திய அதிகாரி க. இரகுநாதன், பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் திருமதி க. இரகுநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2-4-6-29)

# வலி இல்லாமல் போடும் மருந்து ஊசிகள் கண்டுபிடிப்பு

மனிதர்களின் நோய் குணம் அடைய உடலில் ஊசி மருந்து செலுத்தப்படுகிறது. இதனால் வலி ஏற்படும் என்பதால் ஊசி போட்டுக் கொள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அச்சப்படுகின்றனர். இந்த அச்சத்தைப் போக்கி வலி இல்லாத வகையில் போடும் மருந்து ஊசியை ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

இந்த ஊசிகள் கரையக்கூடிய பாலிமர் இழைகளால் தயாரிக்கப்பட்டது. இதை உடலில் குத்துவதன் மூலம் தோலின் அடிப்பகுதி சேதமடையாது. வலி ஏற்படாது. இந்த மைக்ரோ ஊசிகள் 0.5 மி.மீற்றர் நீளமும் 0.3 மி. மீற்றர் அகலமும் கொண்டது. இந்த ஊசி சோதனை செய்து பார்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)


## வெளிநாட்டு வேலை வாய்ப்பு

# KURDISTAN

## குர்திஸ்தான் நாட்டின் தலைநகர் ERBIL இல்

## உடனடி வேலை வாய்ப்பு

வெளிநாட்டு முகவருடன் நேர்முகப் பரீட்சை
இம்மாத நடுப்பகுதியில் கொழும்பில் உள்ள
எமது காரியாலயத்தில் நடைபெறும்.
நேர்முகப் பரீட்சை திகதி பின் அறிவிக்கப்படும்.

## CLEANERS - கிளினேர்ஸ்.

மேலதிகமாக 100 வெற்றிடங்கள் உள்ளன.

இரு தொகுதியினர் (Two Batches) சமீபத்தில் விசா பெற்று ERBIL நாட்டுக்கு பயணமாகி பணியில் ஈடுபட்டுள்ளனர்.
மறு தொகுதியினருக்கு (Third Batch) தற்பொழுது விசா வந்துள்ளது என்பதையும் தெருவித்துக் கொள்ளுகின்றோம்.

மாதச் சம்பளம் ரூபா.28,750/= + மேலதிக கொடுப்பனவு உண்டு.

## MONTHLY SALARY - US$ 250/-

(S.L.Rs.28,750/=)+ O.T Available.

❋ தங்குமிட வசதி இலவசம் ❋ உணவு இலவசம் ❋ மருத்துவ வசதி இலவசம்.
❋ ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).
வயது: 21+ தொடக்கம் 32 வரை.

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது
MR.R.Guna (குணா) என்பவருடன் தொடர்பு
கொண்டு முன் பதிவு செய்யவும்.
மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

**Terms & Conditions**

Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

★ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு.★
இலங்கையர் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு

# TRANSSTAR.

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,
375, Second Floor, Dam Street, Colombo 12.
(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)
Tel: 011 - 2 386 824 Mobile: 077-826 3228

S.L.Bureau Labour Licence : 1311.
S.L.Bureau Approval AL/1311/Advt/02/10.
(Near Hulftsdorp Courts - Colombo)
(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)
(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் மீள்குடியேற்றம் தொடர்பான நடவடிக்கைகள்

## யாழ் அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடத்தில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு யாழ்மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் 04 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் சேர்ந்த 404 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய 901 கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ் அரசஅதிபர் தெரிவித்துள்ளார்.

இதில் 26 ஆயிரத்து 305 குடும்பங்களை சார்ந்த 78 ஆயிரத்து 211 பேரும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் யாழ்மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் 550 குடும்பங்களை சார்ந்த ஆயிரத்து 861 பேரும் யாழ்மாவட்டத்திற்குள் இடம்பெயர்ந்த 848 குடும்பங்களை சார்ந்த 2 ஆயிரத்து 720 பேரும் யாழ் மாவட்ட நலன்புரி நிலையங்களில் இருந்த 2 ஆயிரத்து 949 குடும்பங்களை சார்ந்த 8 ஆயிரத்து 691 பேரும் வெளி மாவட்ட நலன்புரி நிலையங்களில் இருந்து மீள் குடியேற்றம் செய்யப்பட்ட 21 ஆயிரத்து 958 குடும்பங்களைச் சார்ந்த 64 ஆயிரத்து 938 பேரும் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு பின்வரும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

- மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கான 117.845 மில்லியன் ரூபா முற்பண வதிவிட உதவித் தொகை உடனடி கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளதுடன் 480.720 மில்லியன் ரூபா வதிவிடம் அமைப்பதற்கான உதவித்தொகையாகவும் UNHCR நிறுவத்தி னால் வழங்கப்பட்டுள்ளது.
- மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கான் உதவிகளாக 4 ஆயிரத்து 552 குடும்பங்களுக்கான கூரைத்தகடுகள் ஒரு குடும்பத் திற்கு தலா 12 வீதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 3 ஆயிரத்து 95 குடும்பங்களுக்கான கூரைத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றது. இக் கூரைத்தகடுகள் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்றுவருவதனால் கூரைத் தகடுகள் தேவைப்படும் குடும்பங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளன.
- மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 2 ஆயிரத்து 800குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் கொண்ட பொதி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.
- மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 24 ஆயிரத்து 907 குடும்பங்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் இலவச நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.
- மீள் குடியேற்றம் செய்யப்பட்ட 24 ஆயிரத்து 697 குடும்பங்களுக்கு UNHCR நிறுவ னத்தினால் சமையல் உபகரணங்கள் அடங்கிய பொதி ஒவ்வொன்றும் வழங்கப்பட்டுள்ளது.
- தெல்லிப்பளை உயர் பாதுகாப்பு வலயத் தில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ள ஆயிரத்து 601 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவர்களில் 502 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கான முற்பண வதிவிடத் தொகை ரூபா 5000 வழங்கப்பட்டுள்ளது. இவர்களது காணிகளை துப்பரவாக்கும் பணிகள் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தினூடாக ENREP மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் வதிவிட முற் பண உதவித்தொகையான ரூபா 5 ஆயிரம் வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களில் மிகவும் வறிய குடும்பங்கள், பாடசாலை மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அரசாங்க அதிபரின் அனுமதியுடன் அவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றது.
- வேலணை பிரதேச செயலர் பிரிவில் UNOPS திட்டத்தின் மூலம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டமக்களுக்கான 300 வீடுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- மீள் குடியமர்ந்த குடும்பங்களுக்கான கொடுப்பனவு தொகை 50 ஆயிரம் ரூபா வில் செலுத்தப்படவேண்டிய (முற்பண வதி விடக் கொடுப்பனவு ரூபா5ஆயிரம், வதிவிடம் அமைப்பதற்கான தொகை 20 ஆயி ரம் ரூபா) மீதி தொகை ரூபா 25 ஆயிரம். அவர்களது வங்கி கணக்கில் வைப்பில் இடுவதற்கான நடவடிக்கைகளை NECORD நிறுவனம் 06.03.2010 முதல் மேற்கொண்டு வருகின்றது எனவும் குறிப்பிடப்படுகிறது. (2-6)

## புதிய மின்மாற்றி பொருத்துதல்

(வேலணை)

கோப்பாய் மத்தியில் மானிப்பாய் வீதியில் கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு செல்லும் வீதிக்கு அண்மையாக புதிய மின் மாற்றி ஒன்று பொருத்தப்படுகின்றது.

இம் மின் மாற்றியானது வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டத்தின் நிதியிலேயே பொருத்தப்படுகின்றது.

இப்புதிய மின்மாற்றி பொருத்தப்படுவதால் இப்பகுதியில் மின்சாரத்தைப் பெறும் பாவனையாளர்கள் பயனடையவுள்ளனர்.

மேலும் இப்பகுதியில் விநியோகிக்கப்படும் மின்சாரமானது மிகவும் குறைவான வலுவாகவே வந்தது என்றும்இனி தமக்கு மின்சாரத்தைப் பெறுவதில்சிக்கல் நிலை ஏற்பட்டது எனவும் அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர். (6-22)

## பொதுத்தேர்தலில்
# நான்குஅடி நீள வாக்குச் சீட்டு ; 1,500 மேலதிக வாக்குப்பெட்டிகள்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் 637 கட்சிகளையும் சுயேட்சை வேட்பாளர்களையும் கொண்ட 7620 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் சில இடங்களில் வாக்குச்சீட்டின் அளவு நான்கு அடி நீளமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வேட்பாளர் பட்டியலின் வடிவத்தை மாற்றியமைத்து வாக்கு எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கையை குறைத்து வாக்கு பெட்டிகளை அதிகரிக்கும் முடிபுகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. பொதுத்தேர்தலில் அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் 50 அங்குல வாக்குச் சீட்டு உள்ளதால் அதனை கையாள்வது கடினமானது அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடுவதால் இரு பக்கமும் அச்சிடப்பட்ட வாக்கு சீட்டுக் களை பயன்படுத்தும் நடைமுறைகளை மேற்கொள்ளப் போவதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட பட்டியலில் வேட்பாளர்களை கண்டறிந்து புள்ளடியிட்டு பின்னர் மடித்து பெட்டியில் இடுவதற்கு வாக்காளர்களுக்கு அதிக நேரம் எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். 637 கட்சிகளையும் சுயேட்சை வேட்பாளர்களையும் கொண்ட 7620 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 அரசியல் கட்சிகளையும் சுயேட்சை வேட்பாளர்களையும் கொண்ட 360 பேர் போட்டியிடுகின்றனர். எனவே அங்கு தயாரிக்கப்படும் வாக்குச் சீட்டு 30 அங்குலம் (இரண்டரை அடி) நீளமானதாக இருக்கும் என உதவி தேர்தல் ஆணையாளர் ரி.கிருஸ்ணாநந்தலிங்கம் தெரிவித்துள்ளார். கடந்த தேர்தலை விட இது இரு மடங்கு அதிகமாகும். வாக்குச்சீட்டு அதிக நீளமாக உள்ளதால் ஒரு வாக்கு பெட்டியினுள் 600 சீட்டுக்களையே உள்வாங்க முடியும்.

ஆனால் முன் னர் அது ஆயிரமாக ஆக இருந்தது. எனவே எமக்கு மேலும் 250 வாக்குப்பெட்டிக்ள தேவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஒரு மாவட்டத்திற்கு 450 வாக்குப்பெட்டிகள் தேவைப்பட்டது. ஆனால் தற்போது 700 பெட்டிகள் தேவைப்படுகின்றது. எனவே இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் 1500 வாக்குப் பெட்டிகளை தயாரிப்பதற்கு உத்தர விடப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் நிலையங்கள் அதிகமாக உள்ளதால் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களை சேர்ந்த இரு உறுப்பினர்களே அங்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 66 அரசியல் கட்சிகளையும் சுயேட்சை குழுக்களையும் சேர்ந்த 660 பேர் போட்டியிடுவதால் அங்கு வாக்கு எண்ணும் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் வாக்குச் சீட்டு 50 அங்குலம் நீளம் கொண்டதாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (6)

# ஜனநாயகமும் பாராளுமன்றமும் அபகீர்த்திக்கு உள்ளாகியுள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

இலங்கை பாராளுமன்றத்தின் நிலையை கண்டு இந்த நாடு வெட்கப்பட வேண்டிய நிலை காணப்படுவதாகவும் மனநோயாளர் ஆஸ்பத்திரியை விடவும் மோசமானதாகவே காணப்படுவதாகவும் ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

மோசடிக்காரர்களும் காடையர்களும் பாதாள உலகை சேர்ந்தவர்களுமே பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

மேலும் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்பதற்காக இவ்வாறு சிலர் நடந்து கொள்வதால் ஜனநாயமும் பாராளுமன்றமும் அபகீர்த்திக்கு உள்ளாகியிருப்பதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க விசனம் தெரிவித்தார். (2-6)

# கனேடிய பல்கலை மாணவரின் எதிர்ப்பால் பாலித கோஹனவின் விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நியூயோர்க்கிற்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி பாலித கோஹன கனடாவுக்கான தமது விஜயத்தை ஒத்திவைத்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்ளூர் குழுக்கள் போராட்டங்களை நடத்தியமையை அடுத்தே அவர் தமது விஜயத்தை ஒத்திவைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமையன்று பாலித கோஹன விரிவுரை ஒன்றை நிகழ்த்துவதற்காக கனடா டொரன்டோ பல்கலைக்கழகத்திற்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார்.

எனினும் அந்த விரிவுரை பாதுகாப்பு காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மார்க்கிரட் மெக்கோன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கோஹனவின் விஜயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழகத்தின் மாணவர் குழு ஒன்று ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளது.

அத்துடன் பாலித கோஹனவுக்கான விசா அனுமதியை இரத்துச் செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்..

கடந்த வருடம் மே மாதத்தில் கனேடிய நாடா ளுமன்ற உறுப்பினர் பொப்ரே பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி இலங்கைக்குள் அனுமதி மறுக்கப்பட்டமையையும் அவர்கள் சுட்டிக் காட்டினார். (2-6)

# இராஜினாமாக் கடிதம் தொடர்பில் சில ஐ.தே.க.உறுப்பினர் அதிருப்தி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களிடம் இராஜினாமாக் கடிதங்கள் பெற்றுக் கொண்டமை தொடர்பில் சில உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கட்சித் தலைமை பலவந்தமான முறையில் தம்மிடம் இந்த இராஜினாமா குறித்த சத்தியக் கடதாசியைப் பெற்றுக்கொண்டதாக மொனராகலை மாவட்ட வேட்பாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

திகதியிடப்படாத பதவி விலகல் கடிதங்களை பெற்றுக்கொண்டமை குறித்து கட்சி உறுப்பினர்களிடையே அதிருப்தி நிலவுவதாகவும் இவ்வாறான கடிதங்கள் நீதிமன்றில் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவும் ரணில் விக்ரமசிங்கவிடம் தனது இராஜினாமா கடிதத்ததை ஒப்படைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# தேர்தல் சட்டங்களுக்கு முரணாக பிரசாரங்கள் தொடர்கின்றன

## பவ்ரல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் 22மாவட்டங்களிலும் சுமார் 1600 இடங்களில் தேர்தல் சட்டத்திற்கு முரணான வகையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாக பவ்ரல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டுதல், பதாகைகளை காட்சிப்படுத்தல் ஆகியனவே முக்கிய குற்றச்சாட்டுக்களாக அமைந்துள்ளன.

பதுளை,கம்பஹா, காலி,,கொழும்பு மற்றும் கண்டி போன்ற நகரங்களில் அதிகளவில் இவ்வாறு சட்டத்திற்குப் புறம்பான வகையில் பிரசாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை பொதுத் தேர்தல்களின் போதும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும், தாய்லாந்தை மையமாகக் கொண்டு இயங்கிவரும் சுதந்திரமானதும், நீதியானதுமான ஆசிய தேர் தல் அமைப்பின் 50 பேர் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதற்கமைய நாடு முழுவதிலும் சுமார் 8ஆயிரம் உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# சுயாதீனக் குழு வேட்பாளர்களின் கட்டுப் பணத்தை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

வரும் காலங்களில் நடைபெறும் பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்யும் சகல வேட்பாளர்களும் அவர்களது பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்றையும் தேர்தல்கள் செயலகத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென தேர்தல்கள் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இனிவரும் காலங்களில் சுயாதீனக் குழுக்கள் சார்பில் போட்டியிடும் சகல வேட்பாளர்களின் கட்டுப்பணம் செலுத்தும் தொகையையும் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் சில வேட்பாளர்கள் அவர்களது பெயர்கள் வேட்பாளர் பட்டியலில் முதலில் இடம்பெற வேண்டும் என்பதால் அவர்களின் பெயர்களில் அவருக்கு விருப்பமான ஒரு பகுதியை ஆரம்பத்தில் இட்டுக் கொள்வதால் தேர்தல்கள் திணைக்களத்திற்குப் பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும் இதனாலேயே இந் நடவடிக்கையை எதிர்வரும் காலங்களில் எடுப்பதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் அப்பேச்சாளர் கூறினார்.

இது தொடர்பிலான ஆலோசனைகளை அரசுக்கு முன்வைக்கவுள்ளதாகவும் அரசின் அனுமதி பெறப்பட்டதும் பொதுத் தேர்தல்களில் இது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தேர்தல்கள் பேச்சாளர் கூறினார். (2-4-6)

## மாகாண சபைகளுக்கு

# பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்கள் வழங்குதல் குறித்து கவனம்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவாதக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

காணி அதிகாரங்களை வழங்குவது தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் காணி அதிகாரங்களை வழங்குவதனால் பாதிப்புக்கள் ஏற்படாது என ஆளும் கட்சி சிரேஸ்ட அமைச்சர்கள் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கிராம சபைகளை அமைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்கப் பெற்றால் ஓகஸ்ட் மாதமளவில் அரசியல் சாசனத்தில் திருத்தங்களை கொண்டு வருவது குறித்தும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## வடக்கு-கிழக்கை இணைக்கும்

# புடவைக்கட்டுப் பாலம் விரைவில் திறக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஸ்பெயின் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கிழக்கு மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் புடவைக்கட்டு பாலம் மிக விரைவில் திறந்து வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

300 மீற்றர் நீளமானதும் 10.5 மீற்றர் அகலமானதுமான மேற்படி பாலத்தின் நிர்மாணம் ஊடாக பி.424 ஊடான திருகோணமலை, புல்மோட்டை பிரதேசங்கள் இணைக்கப்படவுள்ளன. மேற்படி நிர்மாணப்பணிகளுக்காக ஸ்பெயின் அரசாங்கம் 45 கோடி ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது.

பாலநிர்மாண இறுதிப்பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ள அரசாங்கம் இதன்மூலம் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்துகளை துரிதமாக மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# மலேரியாக் காய்ச்சலை முற்றாக ஒழிக்கும் திட்டம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மலேரியா காய்ச்சலை முற்றாக ஒழிப்பதற்கான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

5 வருடங்களுக்குள் நாட்டிலிருந்து மலேரியா காய்ச்சலை முற்றாக ஒழிப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். பெரவெல பகுதியில் மலேரியா காய்ச்சலால் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக ராகம மருத்துவ பீடத்தின் பேராசிரியர் டாக்டர் விமலதர்ம அபேவிக்ரம குறிப்பிட்டார். குறிப்பிட்ட நோயாளியின் இரத்தமாதிரிகளை பரிசோதனைக்குட்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

மலேரியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நோயாளர் வசித்து வந்த பகுதிகள் குறித்தும் ஆராயப்படுவதாகவும் இதற்கமைய மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் மலேரியா ஒழிப்புதிட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (2-4)

# அடிப்படைவசதிகள் கிடைக்குமென்ற நம்பிக்கையில் தான் மீள்குடியேறியுள்ளோம்

## பூநகரி மக்கள்

(கொழும்பு)

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருப்பதை யடுத்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் கணிசமானோர் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டிருக்கும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக தெரிகின்றது. இந்நிலையில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பூநகரி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என பிரதேச வாசிகள்கோருகின்றனர்.

குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும் என தெரிவிக்கும் பெற்றோர் தற்போது தமது பிள்ளைகள் ஏறத்தாழ மூன்று கிலோமீற்றர் தொலைவிலுள்ள பூநகரி மகாவித்தியாலயத்திற்கு கால்நடையாகவே சென்று திரும்புவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இருந்தபோதும் பல சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரின் வாகனங்களே பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான போக்குவரத்திற்கு துணைசெய்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பூநகரிப் பிரதேசத்தில் மீள் குடியேற்றப்பட்டிருக்கும் மக்களில் ஒருவர் தெரிவிக்கையில்,

நாங்கள் மார்கழி மாதம் 17 ஆம் திகதி மீள் குடியேற்றம் செய்யப்பட்டு தற்போது பூநகரி பகுதியில் வசித்துவருகின்றோம். நாங்கள் இங்கு வந்து சிறிது காலத்தில் பூநகரி மகா வித்தியாலயம் இயங்கத் தொடங்கிவிட்டது.

எங்கள் பிள்ளைகளைப் பார்க்கப் போனால் சராசரி மூன்று மூன்றரைக் கிலோமீற்றர் தூரம் வரை நடந்து போய் வரக்கூடிய சூழ்நிலைதான் காணப்படுகின்றது. இந்த நிலைப்பாட்டில்தான் நாங்கள் இருக்கின்றோம்.

ஏனென்றால் தற்போது எங்களுக்கு எந்த வசதிகளும் இல்லை. பிள்ளைகளுக்கு ஒரு சைக்கிள் வசதியோ ஒருவாகன வசதியோ ஏற்படுத்திக் கொடுக்க முடியா நிலையில் தான் நாங்கள் இருக்கின்றோம்.

செம்மண்குண்டு, நாலாங்கட்டை, செட்டியார் தெருவழி போன்ற இடங்களில் இருந்து எங்களுடைய பிள்ளைகள் பூநகரி மகா வித்தியாலயத்திற்கு கிட்டத்தட்ட 200 இற்கும் அதிகமான பிள்ளைகள் கல்வி கற்க சென்று வருகின்றார்கள்.

இவர்கள் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்தில் தான் பாடசாலைக்குச் சென்று வருகின்றார்கள். இவர்களுக்காகப் பாடசாலை சென்று வர ஒரு பேருந்து சேவையும் வேண்டும்.

மாலை இரண்டு மணிக்கு பாடசாலை முடிவடைந்தது என்றால் பிள்ளைகள் வெயிலில் களைத்து வேர்த்து மிகவும் கஸ்டப்பட்டு கால் நடையாகத்தான் வீடுகளுக்குச் சென்று கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே பாடசாலை செல்லும் பிள்ளைகளுக் கென்று விசேட பேருந்து ஒழுங்குகளை செய்து தரும்படி அரசாங்கத்திடம் நாங்கள் கேட்டு நிற்கின்றோம்.

பெரும்பாலும் நாங்கள் கேட்பது என்னவென்றால் பாடசாலைக்கு பிள்ளைகள் சந்தோசமாகவும் உற்சாகமாகவும் போய் வரவேண்டும் என்றால் போக்குவரத்து ஒழுங்குகளை எமக்கு செய்துதரவேண்டும்.

மீன்பிடி மற்றும் விவசாயத்தை தமது ஜீவனோபாயமாக மேற்கொள்கின்ற மக்களும் இப்பிரதேசங்களில் கூடுதலாக இருக்கின்றார்கள். இவர்கள் எவருக்குமே எந்த வசதிகளும் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

எல்லா வசதிகளையும் எங்களுக்கு அரசாங்கம் ஏற்படுத்தித்தரும் என்ற நம்பிக்கையில் தான் நாங்கள் எமது சொந்தப் பிரதேசங்களில் மீள் குடியேறி இருக்கின்றோம் என பூநகரிப் பகுதியில் மீள்குடியேறியிருக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர். (2-6)

# மரபணுபரிசோதனையின் மூலம் உணவு பழக்கவழக்கத்தை தீர்மானிக்கலாம்

## ஆய்வொன்று தகவல்

(கொழும்பு)

எளிய மரபணு பரிசோதனையின் மூலம் உணவுப் பழக்கவழக்கங்களை தீர்மானிக்க முடியும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எடைகுறைப்பு, கலோரிகளை குறைப்பது கொழுப்பு சத்தான உணவுகளை உட் கொள்தல் உள்ளிட்ட பல்வேறு விபரங்களை மரபணு பரிசோதனையின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்படுகிறது.


மரபணுக்களுக்கு ஏற்ற வகையில் உணவுப் பழக்கவழக்கத்தை மாற்றிக் கொள்வதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கையை தொடர முடியும் மருத்துவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

101 பெண்களிடம் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்க இருதய கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றின் போது இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வெறும் உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளாது மரபணு மூலம் எவ்வாறான உணவுகளை உட்கொள்ள வேண்டுமென தீர்மானிப்பதன் மூலம் கூடுதல் நன்மை அடைய முடியுமென மருத்துவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (2-6)

# பெண்கள் உரிமைகளுக்கான தோற்றப்பாடும் வரலாற்றுப் பரிமாணமும்



## இன்று சர்வதேச மகளிர் தினமாகும்

மனித உரிமைகள் என்பது மனிதனுக்கு உரியதான இயற்று உரிமைகளாகும். எனவே இம் மனித உரிமைகள் ஆண், பெண், சிறுவர்கள் என்ற வேறுபாடின்றி சகலருக்கும் சமனாகக் கிடைக்கவேண்டும். ஆனால் வரலாற்றை நோக்குகையில், தற்போதுவரை இவ் விடயத்தில் பெண்கள் பாரபட்சம் காட்டப்படுபவர்களாகவும் இவற்றை அனுபவிப்பதில் இரண்டாம் நிலையிலே நோக்கப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒரு பிரச்சினையாக இனம் காணப்படாத நிலையில் இன்று பெண்கள் சமூகத்தில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இன்று சமுதாயத்தில் நிலவும் இருவேறு சூழலிலும் எந்தவிதமான தராதர வேறுபாடுகளின்றியும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதனை நாம் அன்றாடம் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

அண்மைக்காலங்களில் பெண்களுக்கெதிரான வன்முறை பெண்களின் மனித உரிமைக்கெதிரான ஒரு மீறலாக இனங் காணப்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் இப்பிரச்சினை கடந்த சில வருடங்களாகவே கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்த வண்ணமேயுள்ளன. இதற்கமைய பெண்கள் உரிமைகளுக்கான தோற்றப்பாடும் வரலாற்றுப் பரிமாணமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இனங்காண்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறையானது பல வடிவங்களில் காணப்படுகின்றன. குறிப்பாக உலகம் முழுவதும் பெண்கள் வெவ்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் வேறுபாடுகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகி வருகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணமாக ஆண் ,பெண்களுக்கிடையிலான உடல் ரீதியான வேறுபாடே காரணமாகும். அதாவது பால், பால்நிலை சார்ந்த எண்ணக்கருக்கள் இவற்றை தீர்மானிப்பவையாக காணப்படுகின்றன.

பால்நிலை என்பது கலாசார ரீதியாக கட்டமைக்கப்பட்டு ஒவ்வொரு சமூகத்திலும் வேறுபட்ட வகையில் ஆணும் பெண்ணும் கணிப்பிடப்படுவதனை நாம் காணலாம்.

இந்நிலையில்தான் பெண்ணியவாதத்தின் குரல் மேலோங்கப்படுகிறது. பெண்ணியவாதிகள் பெண்களுக்கான உரிமைகளைப் பெறுவதில் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். கிழக்கில் 1500 ஆம் ஆண்டு வரை பெண்கள் தீண்டத்தகாதவர்களாகவும் சில உரிமைகளுக்கும் உரித்துடையவர்களாகவும் காணப்பட்டனர். குறிப்பாக Sati என்ற இனக் குழுமப் பெண்கள் கணவனது இறப்பினைத் தொடர்ந்து பெண்களும் எரியூட்டப்பட்டனர். 1850 ஆம் ஆண்டுகளிற்கு முன்னரான காலப்பகுதியில் குறிப்பிட்ட சில பெண்ணியவாதிகளால் நேரடியாகவே பெண்களுக்கான உரிமைகளை வேண்டிப் போராடினர். உதாரணமாக மேரி வோஸ்டன் கிராப் என்பவர் "A Vindication of the Rights of Women" (1972) (பெண்கள் உரிமைகளுக்கான நியாயம்) என்ற நூலில்,

"*ஆணிற்குரிய எல்லா உரிமைகளும் பெண்ணிற்கும் வேண்டும்*" என்றார்.

மற்றும் ஜோன் ஸ்டுவார்ட் மில் என்பவர் "*பெண்கள் தங்களின் வாழ்வை தாங்களே தீர்மானிக்க வேண்டும்*"

"*பெண்கள் தம் கௌரவத்தை தாம் காத்துக்கொள்ள தாம் விரும்பியபடி பற்பல பணிகளை ஏற்பதும் சொத்தில் பங்கு பெறுவதும் ஓட்டுரிமை பெறும் தகுதியுடையவராவதும் மிக முக்கியம்*" என எடுத்துரைத்தார்.

18 ஆம்நூற்றாண்டுகளில் மக்கள் , பெண்கள் சட்டத்தின் கீழ் நியாயமற்ற வகையில் நடத்தப்படுவதாக உணர்ந்தனர். எனவே பெண்கள் இயக்கம் ஒன்று உருவாக, மேற்கு நாடுகள் ஆரம்ப வித்திட்டது. அந்த வகையில் முதலாவது பெண்கள் மாநாடு நியூயோர்க் செனிக்கா போல்ஸில் இடம்பெற்றது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் கலாசாரம் என்ற பேரில் பெண்களின் உரிமைகள் மீறப்படுவதினை எகிப்து நாட்டினைச் சேர்ந்த காசிம் அமின் (Quasim Amin) என்பவர் 1899 ஆம் ஆண்டு எழுதிய *பெண்களின் விடுதலை* என்ற நூலில், தான் வாழ்ந்த காலத்தில் காணப்பட்ட பலதார மணம் மற்றும் பெண்கள் முகமூடி அணிதல் போன்றன தொடர்பாக விமர்சித்தார். இது இஸ்லாமிய மற்றும் அரபு உலகத்தில் பெண்களின் அரசியல் இயக்கத்திற்கு மிகப் பாரிய பங்களிப்பினை ஆற்றியது.

இவ்வாறான படிமுறையான வளர்ச்சியில் இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் வாக்குரிமை பெறல். இதனால் முதலாம் உலகப் போரில் பெண்களது பங்கு வலியுறுத்தப் பட்டது. இரண்டாம் உலகப்போரில் மனித சக்தி குறைவடைந்த போது சோசலிசத்தின் எழுச்சியினால் ; பொருளாதார உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டன. ஆனபோதும், இன்றும்



உலகின் பல பிரதேசங்களிலும் பெண்கள் ஆண்களை விடவும் குறைவாக மதிக்கப்படுவதனைக் காணக் கூடியதாயிருக்கிறது.

எனவே பெண்கள் உரிமைகளுக்கான முழுமையான வளர்ச்சிப் போக்கு இத்துடன் கைவிடப்படாது தொடர்ந்தும் பல பரிமாணங்களைப் பெற்று முற்றிலும் முழுமையான சாசனமொன்று வெளிவரும் வகையில் அதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டே வந்தன. அந்த வகையில் ஐ.நா.வின் பொதுச் சபையினால் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம்திகதி பெண்களுக்கெதிரான சகலவித பாரபட்சங்களையும் அகற்றுதல் பற்றிய சமவாயம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1981 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3 ஆம் திகதி உடன்படிக்கையாக நடைமுறைக்கு வந்தது.

### ஐ.நா.வின் பெண்கள் உரிமைகளுக்கான தோற்றமும் பின்னணியும்

1945 ஆம்ஆண்டு சென்பிரான்சிஸ்கோ மாநாட்டில் பெண்களுக்கானதும் ஆண்களுக்கானதுமான சம உரிமைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. பின்னர் 1946 ஆம் ஆண்டு பெண்கள் அந்தஸ்துக்கான கமிஷன் பெண்களது நிலைமைகளை மேற்பார்வை செய்வதற்காகவும், பெண்கள் உரிமைகளை பேணுவதற்காகவும் பெண்கள் உரிமைகளுக்கான சர்வதேச மசோதா மட்டுமல்ல, நாடுகள் அவ்வுரிமையை அனுபவிப்பதற்கான உத்தரவாதத்திற்கான நிகழ்ச்சி நிரலையும் கொண்டிருந்தது.

1947 ஆம் ஆண்டு பெண்கள் அந்தஸ்துக்கான கமிஷன் நியூயோர்க் நகரில் சந்தித்தது. இந்நிலையில் 1952 ஆம் ஆண்டு பெண்களின் அரசியல் உரிமைகளுக்கான சாசனம்.(Convention on the political Rights of women) உருவாக்கப்பட்டது.

பெண்களின் அரசியல் உரிமைகளுக்கான சாசனமானது பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சாசனத்தின் 7 ஆவது மற்றும் 8ஆவது உறுப்புரைகளில் உள்வாங்கப்பட்டுள்ளது. 1960 களில் பெண்கள் அந்தஸ்துக்கான கமிஷன் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில்பெண்களின் பங்கு தொடர்பாக விவாதிக்கத் தொடங்கியது.

1975 "International Women Year-Equality, Development and Peace" 1976-1986 வரையான காலப்பகுதி பெண்களுக்கான ஐக்கிய நாடுகளுக்கான தசாப்தம் ஆக்கப்பட்டது.

இவ்வரலாற்றுப் பரிமாணத்தின் அடிப்படையில் தான் 1978 Dec -18 ஆம் திகதி பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச சாசனம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1999 ஆம் ஆண்டு இலங்கை இப்பட்டயத்தில் கைச்சாத்திட்டது.

இச்சாசனமானது நாடொன்றின் முழுமையானதும் நிறைவானதுமான அபிவிருத்தி, உலகத்தின் பொதுநலன் மற்றும் சமாதானம் என்பன அடையப் பெறுவதற்கு சகல துறைகளிலும் ஆண்களைப் போன்று சமத்துவமாக பெண்களின் அதிகூடிய பங்குபற்றல் அத்தியாவசியமானதாகும். மேலும் சமத்துவத்திற்கு எதிராக உள்ள கட்டமைப்புக்களை மாற்றி அமைத்தல். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில் கொள்ளல் என்பனவற்றினைக் கருத்தில் கொண்டு தனது சாசனத்தில் ஆறு பகுதிகளை உள்ளடக்கமாகக் கொண்டு பெண்களுக்கெதிராக சகல பாரபட்சங்களையும் நீக்குதல் பற்றிய பிரகடனத்தில் இடம்பெற்றுள்ள தத்துவங்களை செயற்படுத்துவதற்கும் சகல வடிவங்களிலும் அமைந்த தெளிவாக காணக்கூடிய அத்தகைய பாரபட்சங்களை நீக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் உறுதி பூண்டு இதனை நடைமுறைப்படுத்தியுள்ளது.

### இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட பெண்கள் நிலைமை தொடர்பான சர்வதேசப் பிரகடனங்கள்

1.அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் (1948)

2.பெண்களுக்கெதிரான சகல பாரபட்சங்களையும் நீக்குதல் தொடர்பான சமவாயம் (CEDOW -1979)

3.பெண்களது அரசியல் உரிமைகள் பிரகடனம் (1952)

4.திருமணம் செய்த பெண்களின் தேசியம் தொடர்பான உடன்படிக்கை (1962)

### அரசியல் யாப்பு முன்னேற்பாடுகள்

இலங்கை அரசியல் சட்டத்தின் 1978 ஆம் ஆண்டு யாப்பு உறுப்புரை 12 (2) ஆனது பால் ரீதியான சமத்துவத்தை அங்கீகரித்துள்ளது. இதன் அடிப்படையில் உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் தொடர்பான, பால் ரீதியான பாரபட்ச வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

### சட்ட ரீதியான பொறி முறைகள்

1.தொழிலாளர் உரிமைகள் தொடர்பான குறிப்பாக பெண்கள், இளம் பராயத்தவர் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்தல் கட்டளைச் சட்டம்

2.மகப்பேற்றுக் கால சலுகைகள் தொடர்பான சட்டங்கள்

3.பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிரான பாதுகாப்புச் சட்டங்கள்

4.தாபரிப்புச் சட்டம்

5.அனாதைகளுக்கும் விதவைகளுக்குமான ஓய்வூதியச் சட்டங்கள்.

### நிருவாக ரீதியான ஏற்பாடுகள்

1.மகளிர் விவகார அமைச்சு

2.வெளிநாட்டில் தொழில் புரியும் பெண்களுக்கான மகளிர் பிரிவு

3.தேசிய மகளிர் குழு

4.மனித உரிமைகள் ஆணைக்குழு

5.ஒட்புட்சுமன்

6.அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன போன்ற பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறிப் பிடலாம்.

இந்த வகையில் பெண்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பது அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினது கடமையாகும். மேலும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சமூகத்தினது பொறுப்புமாகும். ஆக பெண்களைப் பாதுகாப்பது சமூகத்தினதும் அரசினதும் கடமையாகும். எனவே பெண்களிடையே உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பொருளாதார ஸ்திரப்பாட்டையும் தங்களைத் தாங்கள் நிருவகிக்கும் திறனையும் ஏற்படுத்தும் வகையில் வலுவூட்டல் நடவடிக்கைகளையும் ஏற்படுத்துவது அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூகத்தினதும் கடமையாகும்.

ரி.கனகராஜ்
இணைப்பாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,
யாழ்ப்பாணம்.

# அமெரிக்காவில் கல்விபயில என்ன செய்யவேண்டும்?

அமெரிக்காவில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி கற்க வேண்டுமென்பது பெரும்பாலான மாணவர்களின் கனவு. அதற்கு முன், அமெரிக்கா சென்று குறிப்பிட்ட காலம் வரை கல்வியைக் சுற்று முடித்த பின்பு தாயகம் திரும்புவரை உள்ள செலவு விபரங்களை தெரிந்து கொள்வது நல்லது.


அமெரிக்காவில் எந்தெந்த பல்கலைக் கழகங்கல் உயர் கல்வி கற்பதற்குத் தேவையான நிதி உதவியை வழங்குகின்றனர் என்பதை தெரிந்து கொண்டு அந்தப் பல்கலைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.மிகவும் கஸ்ரப்படும் சூழ்நிலை இருக்கும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் அனுப்புவதை தவிர்த்து விட வேண்டும். நாம் அனுப்பும் விண்ணப்பம் பல்கலைக்கழகத்தில் கிடைப்பதற்கான கடைசித் திகதி எது என்பதை தெரிந்து கொண்டு அந்தத் திகதியில் விண்ணப்பம் கிடைக்குமாறு செய்யாமல் அதற்கு முன்னதாக அனுப்பி வைப்பதோடு விண்ணப்பம் கிடைத்து விட்டதா என்பதை தெரிந்து கொள்ள நாள் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களுக்கும் தெளிவான பதில்களை எழுதுவதோடு எந்தத் தகவலையும் புறக்கணிக்காமல் முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும். உரிய காலத்திற்குள் விண்ணப்பத்தினை அனுப்பி வைப்பதில் கால தாமதம் செய்யும் மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பினை அவர்களாகவே தவிர்த்துக் கொள்கிறார்கள் என்று அர்த்தம்.

அமெரிக்காவில் உள்ள அரசு சார்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் தனியார் கல்வி நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் குறைவானதாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அரச கல்லூரிகளின் கல்விக் கட்டணம் அந்தந்தக் கல்லூரிகளின் தகுதிக்கேற்ப வித்தியாசப்படும். நமது பொருளாதார நிலைக்கேற்ற கல்லூரிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

ஒரு ஆண்டிற்கான கல்விக் கட்டணத்தை நாம் நிர்ணயிக்கும் போது கல்லூரிக்கான கட்டணம், புத்தகங்கள் வாங்கத் தேவைப்படும் தொகை, அமெரிக்காவில் தங்கும் இடத்திலிருந்து கல்லூரிக்குச் சென்று வருவதற்கான போக்குவரத்துக் கட்டணம், தங்கும் விடுதிக்கான வாடகை, உணவு, மருத்துவச் செலவு, பொழுதுபோக்குவ்த்றகுத் தேவைப்படும் தொகை போன்றவற்றைப் பட்டி யலிட்டு மொத்தத் தொகையைக் கணக்கிட்டுக்கொள் ளலாம்.

நாம் தேர்வு செய்துள்ள பல்கலைக் கழகம் அல்லது கல்லூரி அமெரிக்காவின் எந்த இடத்தில் அமைந்துள்ளது



என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

பிரபலமான மாநிலங்களில் தலைநகரில் உள்ள கல்லூரிக்கும் சிறிய நகரங்கள் மற்றும் தீவுகள் சுற்றுலாத் தலங்களின் அருகில் அமைந்துள்ள கல்லூரிக்கும் உள்ள கட்டண விகிதம் வேறுபடும். எனவே மொத்தத் தொகையை நாம் பட்டியிலிடும் போது அந்தந்தக் கல்லூரிகள் அமைந்துள்ள இடத்தின் பொருளாதார நிலைக்கேற்ப கணக்கிட்டுக் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் உள்ள சில கல்லூரிகள் கடுமையான குளிர்பிரதேசங்களில் அமைந்துள்ளன. இந்தக் கல்லூரிகளைத் தேர்வு செய்யும் மாணவர்கள் கடும் குளிரைத் தாங்குவதற்குத் தேவையான உடை மற்றும் காலணிகளுக்கு அதிகமான தொகையைச் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்கள், இளங்கலை பட்டப் படிப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு முழு கல்வி உதவித் தொகையை வழங்கி வருகின்றன. சர்வதேச அளவில் கல்வி பயிலும் ஆயிரம் மாணவர்களுக்கு இந்தக்கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக அமெரிக்காவில் 100 கல்லூரிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

படிப்பில் சிறந்து விளங்கும் மாணவர்கள் இந்த கல்லூரிகளைத் தேர்வு செய்தால் உதவித்தொகையை முழுமையாகப் பெற்று பயனடையலாம். அங்கு கல்வி வாய்ப்பைப் பெற்றுள்ள மாணவர்கள் தம் கல்விக் கட்டணத்தைக் குறைத்துக்கொள்வதற்கான வழி முறைகள் வருமாறு.

குறைவான கல்விக் கட்டணத் தில் தரமான கல்வியைக் கற்றுத்தரும் கல்லூரிகளைத் தேர்வுசெய்யவேண்டும். நான்கு ஆண்டுகளுக்கான இளங்கலை பட்டப்படிப்பில் சேரும் மாணவர்கள் கோடை விடுமுறைகளில் கூடுதலாக ஒரு பாடப்பிரிவினைத் தேர்வு செய்து படிப்பதன் மூலம் அதற்காகத் தேவைப்படும் ஆயிரம் டொலர் பணத்தைச் சேமித்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு கல்வி ஆண்டில் படிப்பிற்கான சிறந்த மாணவர் விருது பெறுவதன் மூலம் அடுத்த ஆண்டிற்கான கல்வி கட்டணத்தில் பாதித் தொகையை மட்டும் செலுத்துவற்கான வாய்ப்பைப் பெறலாம். பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்கள், ஓய்வு நேரங்களில் அங்குள்ள சமையலைகளில் பணியாற்றினால் அதற்கான சம்பளம் கிடைப்பதோடு முழு நேர உணவை இலவசமாகப் பெறுவார்கள்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் உள்ள குடியிருப்புக்களில் நண்பர்களின் உறவினர்கள் தங்கியிருந்தால் அவர்களுடன் இணைந்துகொள்வதன் மூலம் விடுதிக் கட்டணத்தை பாதியாகக் குறைந்துக் கொள்வதோடு போக்குவரத்திற்கான கட்டணத்தையும் தவிர்த்துக் கொள்ளலாம். பெரும்பாலான மாணவர்கள் தங்கள் கல்லூரிகளில் முதல் இரண்டு ஆண்டுகளில் செய்யும் பணிகள் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குத் தேவைப்படும் கல்விக் கட்டணத்தில் ஆயிரம் டொலர்களைச் சேமித்துக் கொள்கின்றனர்.

அமெரிக்காவில் கல்வி பயில்வதற்கான வாய்ப்பினை சர்வதேச அளவில் பெற்றுள்ள மாணவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் அதிகபட்சமாக 20 மணி நேரம் பல்கலைக்கழக வளாகத்திற்குள் பணியாற்றுவதற்கான அனுமதியை அதிகாரிகள் அளித்துள்ளனர். இதன் மூலம் கிடைக்கும் பணத்தில் புத்தகங்கள், உடைகள், பொழுது போக்கிற்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளலாம்.

இதுதவிர, பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவியாளராகப் பணியாற்றுவது, விடுதிக்கு வரும் பார்வை யாளர்களுக்கு மற்றும் டெலிஃபோன் அழைப்புகளுக்கு பதில் சொல்வது, படிப்பு தொடர்பாக தயாரிக்கப்படும் ஒலி, ஒளி குறுந்தட்டுக்களை உரியவர்களிடமிருந்து பெற்று வகுப்பு மாணவர்களுக்கு விநியோகிப்பது, பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகங்கள், புத்தகக் கடைகள், உடற்பயிற்சி நிலையங்கள், நிர்வாகத்துறை தொடர்பான அலுவலகங்களில் வேலை செய்வதன் மூலம் பணத்தை சம்பாதிக்கலாம்.

இந்தப் பணம் பல்கலைக்கழகத்திற்குள் சுற்றுவதற்கான சைக்கிள் வாடகை, உடைகளை உலர்த்தி இஸ்திரி செய்வதற்கான கட்டணங்களை ஈடு செய்யும். இதன்மூலம் கல்விக் கட்டணத்தை குறைத்துக் கொண்டு சிறந்த மாணவர்களாகத் தாயகம் திரும்பலாம்.

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# வேலை வாய்ப்புக்கு அவசியமான திறன்கள்

சாதாரணமாக பட்டப்படிப்பு படிக்கும் ஒருவர் அவரது படிப்பை முடித்து வேலைக்குப் போக விரும்பும் காலத்தில் அவரிடம் பொதுவாக நிறுவனங்கள் என்ன எதிர்பார்க்கின்றன தெரியுமா?

அவரவர் படிக்கும் படிப்பைப் பொறுத்தும் எந்த நிறுவனத்தில் என்ன வேலை என்பதைப் பொறுத்தும் மட்டுமே இதைக் கூற முடியும் என பதில் தரப்பட்டது.பட்டப்படிப்பு முடித்து வெளியே வரவிருக்கும் நபரிடம் அவரது பாடப்பிரிவில் அவரது திறனை எதிர் பார்க்கிறார்கள். மேலும் அவருடைய தகவல் தொழில்நுட்பத் திறன் என்பது மிக முக்கியமான தேவை.

தற்போது தகவல் தொடர்பாடல் தொடர்புடைய படிப்பல்லாத பிரிவுகளில் படிப்பவரிடமும் அவரது பிரிவில் ஐரி யை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதும் தெரிந்திருக்க வேண்டிய திறனாகிறது. அடுத்ததாக அவரது முகாமைத்துவத்திறன் ஒரு முக்கிய காரணியாகிறது.

குறிப்பிட்ட பணி தரப்படும் போது அவர் அதை எப்படி திறம்பட நிர்வகிக்கிறார் என்பதை இது குறிக்கிறது. நான்காவதாக அவரிடம் எதிர்பார்க்கப்படுவது அவரது தகவல் தொடர்புத் திறன். உங்களது தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் சில இடங்களில் இரண்டாம். மொழியான சிங்களத்திலும் உங்களுக்குள்ள தகவல் தொடர்புத் திறன் என்பது மிக மிக முக்கியமான தேவையாக தற்போது கருதப்படுகிறது. கடைசியாக அவரது அடிப்படையான பொது அறிவுக்கும் முக்கிய பங்கிருக்கிறது. இந்த 5 தேவைகளில் அனைத்து பட்டப் படிப்பு முடித்து வருபவர்களையும் கூறி விடலாம்.


இன்ஜினியரிங், கலைப் பிரிவு, அறிவியல் பிரிவு என அத்தனை பிரிவு பட்டப்படிப்பு முடித்து வருபவர்களிடமும் இவை தான் பரிசோதிக்கப்படுகிறது.

கல்லூரிகளில் இறுதியாண்டு படிப்பவராக இருந்தாலும் படிப்பு முடித்து வேலைக் காகக் காத்திருப்பவராக இருந்தாலும் உங்களை நீங்களே இவற்றைக் கொண்டு பரிசோதித்துக் கொள்ள முடியும். கல்லூரிகளிலோ பல்கலைக்கழங்களிலோ நீங்கள் பெற்றுள்ள புள்ளிகளை இவை பரிசோதிப்பதில்லை. மாறாக குறிப்பிட்ட பாடத்தை நீங்கள் எப்படி புரிந்து கொண்டு மனதில் வைத்திருக்கிறீர்கள் என்பது தான் பரிசோதிக்கப்படுகிறது.

B.com முடித்து விட்டு வருபவர் கணனி உதவியோடு எப்படி அவரது பணிகளை மேற்கொள்ள முடிகிறது என்பதை தகவல் தொழில்நுட்பத்திறனாக ஒரு உதாரணத்திற்குச் சொல்லலாம். ஆரக்கிள், டேலி போன்ற சொப்ட்வெயர்களில் பட்டப்படிப்பு முடிக்கும் முன்பே சிறப்பான திறன் பெற்றிருப்பவரை தற்போது எண்ணற்ற கம்பனிகள் தேர்வு செய்வதை நாம் தற்போது பார்க்கிறோம்.

வேலை தரும் நிறுவனத்தில் நடைமுறையில் ஒரு சூழலை நீங்களாகவே கற்பனை செய்து இந்தத் திறன்களை நாம் பெற்றிருக்கிறோமா என்பதை பரிசோதிப்பது சிறப்பான பலன் தரும். நிறைய படிக்காமல், நடைமுறைச் சூழல்களை கவனிக்காமல் உங்களால் முகாமைத்துவத் திறனைப் பெறவே முடியாது. வங்கிகளிலும் பல்துறை நிறுவனங்களிலும் அன்றாட நிகழ்வுகளை உங்களுக்குத் தெரிந்தவர் மூலமாக கவனித்துப் பாருங்கள்.

இதில் கற்றுக் கொள்ளலாம் எண்ணற்ற



முகாமைத்துவத் திறன்களை. அன்றாட பத்திரிகைகளை படிக்காமல், செய்திகளைக் கேட்காமல் அல்லது பார்க்காமல் பொது அறிவைப் பெற முடியுமா? இப்படி செய்யத் தொடங்கினால் மட்டுமே உங்களால் நம்பிக்கையுடன் பேச, பழக முடியும். அப்போது தான் உங்களது தகவல் தொடர்புத்திறன் மேம்படும்.

எப்படி இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கிறது என்பதைப் பார்த்தீர்களா? இந்த 5 திறன்களில் தற்போது நீங்கள் எத்தனை பெற்றுள்ளீர்கள்? எவற்றைப் பெற கடுமையாக உழைக்க வேண்டியிருக்கிறது? எந்த கால கட்டத்திற்குள் இவற்றைப் பெற முடியும் என்று உங்களுக்காகவே நீங்கள் இவை பற்றி ஒரு சுய பரிசோதனை செய்து கொள்ளுங்கள். வெகு விரைவில் உங்கள் திறன்களில் தேவைக்கும் வெற்றிக்குமான தூரம் குறையத் தொடங்கும்.

## பொது அறிவு

➢ சர்வதேச நாணய நிதியம் எங்குள்ளது?

வோஷிங்டன்

➢ முதல் உலகப்போர் முடிவுற்ற ஆண்டு?

1918

➢ மகாத்மா காந்தி பிறந்த ஆண்டு

கி.பி 1869

➢ கொல்கத்தாவிலிருந்து இந்தியத் தலைநகரம் எந்த ஆண்டு டெல்லிக்கு மாற்றப் பட்டது?

கி.பி 1911

➢ மனநோயை ஹிப்னாடிசம் மூலம் குணப்படுத்தலாம் என்றவர்?

பிராய்ட்

➢ டி.சி.எம்.கோப்பை எந்த விளையாட்டுடன் தொடர்புடையது

கால்பந்து

➢ ஐரோப்பாவின் நோயாளி என அழைக்கப்படுவது?

துருக்கி

➢ எந்தப் பல்கலைக்கழகம் பல்வேறு இடர்களைத் தாண்டி பெரும்பான்மையான மக்களை சென்றடைகிறது?

திறந்தவெளிப் பல்லைக்கழகம்

➢ விண்வெளி மண்டலங்களின் சுழற்சி என்ற நூலின் ஆசிரியர்

கொப்பர்நிகஸ்

➢ நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தை இயற்றியது?

ஆழ்வார்கள்

➢ ஓசோன் மண்டலத்தில் ஏற்படுகிற துளைகளால் உருவாகும் விளைவு எது?

புற ஊதாக்கதிர்கள்

# வைகோவுக்கு மறுமலர்ச்சி கிடைக்குமா ?

## கட்சி தொண்டர்களின் எதிர்பார்ப்பு



அரசியலில் பெரிய அளவிற்கு எந்தவித மாற்றத்தையும் காணாமல் துவண்டு போயிருக்கும் ம.தி.மு.கவிற்கும், கட்சியின் பொதுச் செயலர் வைகோவிற்கும் விரைவில்" மறுமலர்ச்சி" ஆரம்பமாகும் என அக்கட்சி தொண்டர்களிடையே பலமாக பேச்சு அடிபட ஆரம்பித்துள்ளது.

கூட்டணியின் தலைவர் என்பதையும் தாண்டி, தனது கட்சிக்கு மறுவாழ்வு தரும், "ரட்சகராக" ஜெயலலிதாவை பெரிதும் நம்பியிருக்கிறார் வைகோ.

கட்சியில் நம்பிக்கைக் குரியவர்களாக இருந்த பல பிரமுகர்கள் வரிசையாக காலை வாரிய சோகம் வைகோ விற்கு இல்லாமல் இல்லை. ஆனால், "கட்சிக்கு கண்டிப்பாக ஒருநாள் ஏற்றம் கிடைக்கும்'' என்ற நம்பிக்கை மட்டும் வைகோவிடம் திடமாக இருக்கிறது.

இந்நிலையில், தனக்கு ராஜ்யசபா எம்.பி. பதவி கிடைப்பதன் முலம், தொண்டர்களிடையே புதிய எழுச்சிகளையும் உத்வேகத்தையும் எழுப்பமுடியும் என அவர் நினைக்கிறார். தொண்டர்களும், வைகோ எம்.பியாகும் நாளை எதிர்பார்த்தபடி உள் ளனர். ஆனால், பதவி கிடைக்க ஜெயலலிதாவின் கடைக் கண் பார்வை கிடைக்குமா என்பது தான் தொண் டர்களிடையே மிகப் பெரிய கேள்வியாக உள் ளது.

சமீபத்தில் அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதாவை அவரது போயஸ் தோட்ட இல்லத்தில் வைகோ சந்தித்து, பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்.

அப்போது,ராஜ்யசபா எம்.பி. பதவி குறித்து ஜெயலலிதாவிடம் வைகோ பேசியதாகவும், அதற்கு தனது கட்சியினருக்கு அப் பதவியை வழங்க இருப்பதாக ஜெ.தெரிவித் ததாகவும் அ.தி.மு.க.வட்டாரத்தில் பரபரப் பான பேச்சு உலா வருகிறது.இதனால் வைகோ சோகமாகவும், வருத்தமாகவும் இருக்கிறார் என கட்சி வட்டாரங்களில் திடீரென புரளி கிளம்பியது.

அது குறித்து விசாரித்த போது அப்படி எதுவும் இல்லை என உறுதியான செய்திகள் தெரிவிக் கின்றன.

இது தொடர்பாக, கட்சிப் பிரமுகர்கள் சிலர் கூறியதாவது, கடந்த லோக்சபா தேர்தலில் வைகோவெற்றிபெறுவார் என் அ.தி.மு.க., ம.தி.மு.க.வினர் மட்டுமல்லாமல், இலங்கை தமிழர்களும் பெரிதும் எதிர்பார்த்தனர். ஆனால், அந்த எதிர்பார்ப்பு தவிடு பொடி யானது.

தோல்வி அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காக மக்கள் பிரச்சினைகளை கையில் எடுத்துக் கொண்டார்.

குறிப்பாக, நதிகள் மீது தனது முழுக் கவனத்தையும் செலுத்தினர்.

வைகோவை பொறுத்தவரையில், எம்.பி. பதவியை கடந்து மாவட்ட, மாநில அரசியலைக் கடந்து,தேசிய எல்லைக்கும் அப்பாற்பட்டு, சர்வதேச அளவிலும், ஐ.நா. அமெரிக்க செனட்சபையிலும் அவரது குரல் ஒலித்துள்ளது.

தற்போது பள்ளி, கல்லூரிகள், கட்சி பொதுக் கூட்டங்கள், மாநாடுகளில் அவர் குரல் ஒலித்தாலும், அவரது சிம்மக்குரல் மீண்டும் ராஜ்யசபாவில் ஒலிப்பதை நாங்கள் கேட்க ஆசைப்படுகிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். வைகோ இதுவரை மூன்று முறை ராஜ்யசபாவின் எம்.பியாகவும் இரு முறை லோக்சபா எம்.பியாகவும் பணியாற்றியுள்ளார். இனியும் அவர் பணியாற்ற வாய்ப்பு உள்ளதா என்பது, ஜெ.வுக்குத் தான் வெளிச்சம். (2-6)

## ரஷ்யாவிடமிருந்து மேலும் விமானங்கள் கொள்வனவு

ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புடின் இந்தியா வரும்போது இரு நாடுகளுக்கும் இடையே 4 பில்லியன்டொலர் மதிப்பிலான பாதுகாப்புத் துறை ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா கூடுதலாக 29 மிக்-29 கே போர் விமானங்களை வாங்கவுள்ளது. இதுதவிர ஐந்தாவது தலைமுறை போர் விமானங்களை இரு நாடுகளும் இணைந்து தயாரிக்கும் ஒப்பந்தமும் இதில் அடங்கும். இந்த ஒப்பந்தத்தில், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள அட்மிரல் கோர்ஷ்கோவ் விமானம் தாங்கி போர்க் கப்பலை இந்தியாவுக்கு அளிக்கும் இறுதி ஒப்பந்தமும் கையெழுத்தாகவுள்ளது.இந்த பழைய கப்பலை புதுப்பிக்கவும், சீரமைக் கவும் இந்தியா கூடுதலாக 2.35 பில்லியன் டொலரை ரஷ்யாவிடம் வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-6)

# நிலநடுக்கத்தைப் பற்றி ஆய்வு செய்தால் நோபல் பரிசு பெற வாய்ப்புள்ளது

## அப்துல்கலாம் தெரிவிப்பு



நிலநடுக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தால் நோபல் பரிசு பெற வாய்ப்புள்ளதாக முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் மாணவர்களிடம் கூறியுள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆராய்ச்சி மையத்தை (சி&ஸ்டார்) தொடங்கி வைத்து கலாம் பேசியதாவது,

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் ஆராய்ச்சிக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கின்றன. அதேபோன்ற சூழலை இங்கு உருவாக்க வேண்டும். ஆராய்ச்சியில் ஆர்வம் உள்ள இளைஞர்களை அடையா ளம் கண்டு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

தோரியத்தை எரிசக்தியாக்குவது, உயிரி தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அதிக வரவேற்புள்ளது. எச்.ஐ.வி, நிலநடுக்கம் ஆகியவை குறித்த ஆய்வும் தேவையாக உள்ளது. இந்தத் துறைகளில் ஆராய்ச்சி செய்தால் நோபல் பரிசுபெற முடியும்.

ஆராய்ச்சியில் ஈடுபடுவோருக்காக "ஒன் லைன் பிளாட்பார்ம்" ஒன்றை உருவாக்கி அதன் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். இவ்வாறு அப்துல் கலாம் பேசினார்.

எத்திராஜ் கல்லூரியில் மாணவிகளுடன் நடந்த கலந்துரையாடலின் போது, படித்த பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும். ஒரே மாதிரியான பாடத் திட்டத்தின் மூலம் பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும். ஒரே மாதிரியான பாடத் திட்டத்தின் மூலம் சிறந்த மாணவர்களை உருவாக்க முடியும்.

ஜனாதிபதியாக இருந்தபோது எனது அனுபவங்களை புத்தகமாக எழுதியுள்ளேன். இந்தப் புத்தகத்தை இன்னும் ஒரு மாதத்தில் வெளியிடத்திட்டமிட்டிருக்கிறேன்.

2020 இல் சந்திரனுக்கும், 2030 இல் செவ்வாய்க்கிரகத்துக்கும் இந்தியாவில் இருந்து மனிதனை அனுப்பத் திட்டமிட்டிருப்பதாக இஸ்ரோ தலைவர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சென்னை மருத்துவக் கல்லூரி விழாவில் பேசுகையில், ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் பார்க்காமல் அர்ப்பணிப்பு உணர்வுடன் சிகிச்சை அளியுங்கள். கிராம ஏழைகளுக்கும் குறைந்த செலவில் நவீன மருத்துவம் கிடைக்கவேண்டும்.குறைந்த விலையில் மருந்துகள் கண்டு பிடிக்க வேண்டும்.வயிற்று வலியுடன் வரும் சாதாரண நோயாளியை , எக்ஸ்ரே, ஸ்கேன் பரிசோதனைகள் செய்து நோயை சரி செய்யாமல், எளிதான பரிசோதனையில் வியாதியைக் கண்டுபிடித்து சரிசெய்ய வேண்டும் என்று கலாம் வலியுறுத்தினார். (2-6)




# இந்திய ஆட்சியை கைப்பற்ற திட்டமிட்டிருப்பது உண்மைதான்

## மாவோயிஸ்டுகளின் தலைவர்

(கொல்கத்தா)

மாவோயிஸ்டுகள் 2050 ஆம் ஆண்டு கைப்பற்ற இலக்கு வைத்திருக்கிறார்கள் என்று டில்லியில் நடந்த ஒரு கருத்தரங்கில் மத்திய உள்துறை செயலாளர் கோபால கிருஷ்ணபிள்ளை கூறினார்.

இது குறித்து மாவோயிஸ்டு இயக்கத் தலைவர் கிஷன்ஜி என்றகோடேஸ்வர்ராவ் கூறும்போது, நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டிருப்பது உண்மைதான். மக்கள் ஆதரவுடன் போர் நடத்தி எங்கள் இலக்கை அடைவோம். 2050 ஆம் ஆண்டுக்கு முன்பே இது நடந்துவிடும்.

எங்களுக்கு என்று தனி இராணுவம் உள்ளது. அதைப் பயன்படுத்தி இராணுவத்தையும், பொலிஸையும் விரட்டியடித்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றுவோம். இதற்காக படையை வலிமைப்படுத்த எங்களுக்கு கால அவகாசம் தேவை இல்லை. எங்களது திட்டம் நீண்டகாலத் திட்டமாகும்.

72 நாட்களுக்கு எங்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கூறியிருந்தோம். நாங்கள் கூறிய சமரச யோசனையை மத்திய அரசு ஏற்கவில்லை. நாங்கள் சொன்னதை ஏற்று அரசு பேச்சுவார்த்தைக்கு சம்மதிக்க வேண்டும்.

இல்லையெனில் கொல்கத்தா, புவனேஸ்வர் நகரங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படும் என்று எச்சரிக்கிறேன். இந்தத் தாக்குதல்களுக்காக தற்போது நாங்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறு மாவோயிஸ்டு தலைவர் கிஷன்ஜி கூறினார்.

இதற்கிடையே மாவோயிஸ்டுகள் சமீப காலமாக அதிக அளவில் சங்கேத வார்த்தைகளைப் பயன்படுத்துவதை உளவுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர். சமீபத்தில் மாவோயிஸ்டுகளின் தொலைபேசி உரையாடலை பீகார் பொலிஸார் ஒட்டுக்கேட்டனர். ஒரு மாவோயிஸ்டு திருமண கோஷ்டி வந்துவிட்டது என்று சொல்ல, எதிர்முனையில் பேசிய மற்றொரு மாவோயிஸ்டு, அப்படியா மணமகன் கருப்பா, சிவப்பா? என்று கேட்டார்.

இதில் திருமண கோஷ்டி என்று அவர்கள் குறிப்பிட்டது அதிரடிப்படை பொலிஸை குறிக்கிறது. மணமகன் கருப்பா, சிவப்பா என்று கேட்டதற்கு, வந்திருப்பது மத்திய பொலிஸ் படையா அல்லது சிறப்பு அதிரடிப்படை பொலிஸாரா? என்று கேட்டதாக அர்த்தமாம்:

இதுபோல வெடிபொருட்கள், ஆயுதங்கள், முக்கிய நகரங்கள், தங்கள் படை நகர்வு திட்டங்கள் உள்ளிட்ட எல்லாவற்றையுமே மாவோயிஸ்டுகள் சங்கேத வார்த்தைகளைப் பயன்படுத்தியே பேசுகின்றனர். இது உளவுத் துறைக்கு கடும் சவாலாக உள்ளது. (2-6)

# இலங்கை கடற்படையால் இந்திய மீனவர் தாக்கப்பட்டமை குறித்து விசாரணைகள்

(இராமேஸ்வரம்)

சேது சமுத்திர ஆய்வுப்பணிக்காக, தனுஷ்கோடி கடல்பகுதியில் நிறுவப்பட்ட ஒளிரும் மிதவைகளைக் கண்காணித்து வந்த மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் தாக்கிய சம்பவம் குறித்து, இந்தியக் கடற்படை புலனாய்வுப் பிரிவினர் விசாரணையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்திற்காக மாற்றுவழித்தடத்தை தேர்வு செய்ய, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, மன்னார் வளைகுடா, பாக்ஜலசந்தி கடல் பகுதியில் தேசிய கடல் ஆராய்ச்சி மையத்தின் சார்பில், கடல் சுற்றுச்சூழல் குறித்த ஆய்வுப் பணிகள் நடக்கின்றன.

இதற்காக கோடியக்கரை முதல் பாம்பன் வரையிலான கடல் பகுதியில் எட்டு இடங்களில், இரவிலும் ஒளிரும் மிதவைக் கருவிகள் நிறவப்பட்டுள்ளன.

இக்கருவிகளை படகுகள், கப்பல்கள் சேதப்படுத்தாமல் பாதுகாக்க, ஒப்பந்த அடிப்படையில் மீனவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பெப். 16இல் தனுஷ்கோடி கடல் ஐந்தாம் மணல் திட்டுப்பகுதியில் கண்காணிப்புப் பணியில் இருந்த, பாம்பன் மீனவர்கள் அகஸ்டின், ரீகன் இருவரையும் ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் தாக்கினர். பாத்திரங்கள், எமர்ஜென்சி, டோர்ச்லைட் போன்றவற்றைய்யும் பறித்துவிரட்டினர்.

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த இலங்கைக் கடற்படையினர் . காவல் பணியில் ஈடுபட்ட மீனவர்களை தாக்கிய சம்பவத்திற்கு, இந்தியக் கடற்படையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மீனவர்கள் தரப்பில் கூறப்பட்டது.

பரபரப்பை ஏற்படுத்திய இச்சம்பவம் குறித்து, சேது சமுத்திர திட்ட அதிகாரிகளும், புலனாய்வு துறையினரும் விசாரித்து, அரசுக்கு அறிக்கை அனுப்பிவைத்தனர். இந்நிலையில், இந்திய கடல் எல்லைப்பகுதிக்குள் நடந்த இச்சம்பவம் குறித்து, இந்திய கடற்படையின் புலனாய்வுத் துறையினரும் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

இராமேஸ்வரம் வந்த இப்பிரிவு அதிகாரிகள், கடற்படை முகாம் சென்று கடற்படையினரிடமும், சம்பந்தப்பட்ட மீனவர்கள், மாநில புலனாய்வுத்துறையினர், சேது சமுத்திர திட்ட அதிகாரிகளிடமும் விசாரித்து வருகின்றனர். (2-6)

# இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரிக்கை

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய பிரிஸ்பேனில் உள்ள கத்தோலிக்க நீதி மற்றும் சமாதான ஆணைக்குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் ஆடைக் கோட்டா வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிக் கொண்டமையை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் நிறைவேற்று அலுவலர் பீட்டர் ஆன்ட் இது தொடர்பில் கருத்துரைக்கையில்; இலங்கை உண்மை மற்றும் ஜனநாயக விழுமியங்களை இழந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மேற்கத்தைய நாடுகளுடன் இணைந்து அவுஸ்திரேலியாவும் இலங்கையின் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கடும் தொனியில் குரல் கொடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2-4-6)

# அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஒரு கோடியே 66 இலட்சம் ரூபா செலவு

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்காக நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படுவதால் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு கோடியே 66 இலட்சம் ரூபா செலவாகுமென சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளபோதும் அவசர காலச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மீண்டும் நாடாளுமன்றம் கூட்டப்படுவதால் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களது ஊதியம் மற்றும் ஏனைய சலுகைகளுக்காக ஒரு கோடியே 66 இலட்சத்துக்கும் கூடுதலாக தொகையைச் செலவிட வேண்டியுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பு உறுப்பினர்களின் பதவிகளும் இரத்தான நிலையில் அவசர காலச் சட்டம் தொடர்பிலான விவாதத்தை நடத்த நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படுகிறது. இதன் காரணமாக அமைச்சர்களுக்கும் முன்னாள் உறுப்பினர்களுக்கும் ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளுடன் ஏனைய சலுகைகளும் உரித்தாகும்.

இதன் பிரகாரம் நாளை செவ்வாய்க்கிழமை முதல் பொதுத் தேர்தல் நடைபெறும் வரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக செலவிடப்படும் தொகை ஒரு கோடியே 19 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலாக இருக்கும் என்றும் அமைச்சர்களுக்காக செலவிடப்படும் தொகை 46 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாவுக்குக் கூடுதலாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் நாடாளுமன்றம் கூட்டப்பட்டதன் பின்பு பொதுத் தேர்தல் நடைபெறும் காலப்பகுதிக்குள் சகல உறுப்பினர்களது அதிகாரங்களும் மீண்டும் பலம் வாய்ந்ததாக அமைவதாலேயே வழங்கப்படுவதாகவும் நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (2-4-6)

# 7168 வேட்பாளர்களில் 13 பேர் மட்டுமே சொத்து விபரங்களை சமர்ப்பித்துள்ளனர்

## தேர்தல்கள் செயலகம்

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடும் 7 ஆயிரத்து 168 வேட்பாளர்களில் 13 வேட்பாளர்களே தமது சொத்துக்களின் விபரங்களைச் சமர்ப்பித்துள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது; தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது சொத்து விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என பொது அமைப்புக்களும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் தேர்தல் ஆணையாளரை வலியுறுத்தியுள்ளன.

எனினும் நேற்று முன்தினம் வரையிலும் 13 வேட்பாளர்களே தமது சொத்துக்களின் விபரங்களைச் சமர்ப்பித்துள்ளனர். ஆனால் 7 ஆயிரத்து 168 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

எல்லா ஆவணங்களும் பொதுமக்கள் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால் நாம் இது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு அழுத்தங்களைக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்கள் தமது சொத்துக்களின் விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தேர்தல் ஆணையாளர் அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால் தன்னால் இயலவில்லை என ஆணையாளர் கூறலாம். அவர் அவ்வாறு தெரிவிக்க முடியாது. அவ்வாறு தெரிவித்தால் அவரின் நடவடிக்கைகள் குறித்து மக்களிடம் பல கேள்விகள் எழலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-4-6)

# வடக்கை அபிவிருத்தி செய்வதற்கு மக்களின் ஆதரவு இன்றியமையாதது

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கை அபிவிருத்தி செய்வதற்கு மக்களின் ஆதரவு இன்றியமையாததென ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் கம்பஹா மாவட்ட ஆளும் கட்சி முதன்மை வேட்பாளருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தை வடக்கு மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏழு ஆண்டுகளுக்கு ஆட்சியை முன்னெடுக்க உள்ள ஜனாதிபதியுடன் இணைந்து வடக்கு மக்கள் செயற்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

இளைஞர் யுவதிகள் மத்தியில் காணப்பட்ட வெடிகுண்டு கலாசாரத்தை களைந்து சுதந்திரமாகவும் அச்சமின்றியும் வாழ்வதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் அரசியல் தலைவர்களின் பிழையான வழிகாட்டல்களுக்கு மக்கள் ஏமாந்து விடக்கூடாது என தெரிவித்துள்ள அவர் தமிழ் மக்களின் நாளாந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க ஜனாதிபதி பூரண உதவிக் கரம் நீட்டுவார் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் தமிழ் மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கரத்தைப் பலப்படுத்த துணிச்சலுடன் செயற்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (2-4-6)

# சகாராவில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உருவாக்கும் திட்டம்

## உலகமே ஒளிரும் - வல்லுநர்கள் நம்பிக்கை

(வோஷிங்டன்)

ஜேர்மனியைச் சேர்ந்த பொறியியலாளர் சகாரா பாலைவனத்தில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் சாதனங்களை நிறுவத் திட்டமிட்டுள்ளனர். இந்த சூரிய சக்தி திட்டம் மூலம் உலகத்திற்கு மின்சாரம் விநியோகம் செய்ய முடியும் என தொழில்நுட்ப வல்லுநர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சகாரா பாலைவனத்தில் 35 இலட்சம் சதுர மைல் பரப்பளவை இந்தத் திட்டத்திற்காக பொறியியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பயன்படுத்தவுள்ளனர். இது சகாரா பாலைவனத்தின் மொத்த பரப்பளவில் ஒரு சத வீதம்.

இது குறித்து டிஸ்கவரி நியூஸ் வெளியிட்டுள்ள செய்தியில்; இந்தத் திட்டத்திற்காக குழாய் போன்ற அமைப்புடைய பாராபோலிக் ட்ரப் எனும் சாதனத்தைப் பயன்படுத்தி சூரிய வெப்பத்தைச் சேகரித்து அதற்கென இருக்கும் பிரத்யேக தொழில்நுட்பத்தின் மூலம் மின்சாரம் தயாரிக்க வல்லுநர்கள் திட்டமிட்டுள்ளனர்.

எதிர்வரும் 2050ஆம் ஆண்டு ஐரோப்பாவின் மின்சாரத் தேவையில் 15 சதவீதத்தைப் பூர்த்தி செய்வதே இந்த திட்டத்தின் முதல் நோக்கம். சகாரா பாலைவனத்தில் இருந்து ஐரோப்பாவிற்கு மின்சாரத்தை கொண்டு செல்வது தான் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. இதற்கும் தீர்வு காணுவோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. (2-4-6)

# பாக். இராணுவத்தினர் தாக்குதலால் தலிபான் தீவிரவாதிகள் 30 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கில் பழங்குடியின பகுதியில் இராணுவத்தினர் ஹெலிகொப்டர் மூலம் நடத்திய தாக்குதலில் தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பைச் சேர்ந்த மூன்று தலைவர்கள் உட்பட 30 தீவிரவாதிகள் உயிரிழந்தனர் என அந்நாட்டு உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் தெரிவித்தார்.

இது குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் கூறியதாவது; பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள முகமந்த பழங்குடியினர் பகுதியில் அமைந்துள்ள பண்டியாலியில் பயங்கரவாதிகளின் மறைவிடங்களைக் குறிவைத்து இராணுவத்தினர் கடந்த வெள்ளியன்று ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்தினர். அதில் தெஹ்ரிக் - இ-தலிபான் படையின் துணைத் தலைவர் மவுலவி பக்கிர் முகமது, சுவாட் பகுதியைச் சேர்ந்த தலிபான் தலைவரான பஸ்லுலாவின் நெருங்கிய உதவியாளர் பத்தேன் முகமது மற்றொரு கமாண்டரான குவாரி சியாவுர் ரகுமான் ஆகியோர் உட்பட 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.




இதில் பத்தேன் முகமதுவின் உடலை பாதுகாப்பு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். மற்றவர்களின் உடல்களை இன்னும் கைப்பற்றவில்லை. இவ்வாறு ரகுமான் மாலிக் கூறினார். (2-4-6)

# தேக்கரண்டி மூலம் சுரங்கம் தோண்டி சிறையிலிருந்து தப்பிய பெண் கைதி

## நெதர்லாந்தில் சம்பவம்

நெதர்லாந்து நாட்டின் சிறையில் இருந்து பெண் கைதி, தேக்கரண்டி மூலம் சுரங்கம் தோண்டி தப்பித்துச் சென்று விட்டார்.

நெதர்லாந்து நாட்டின் பிரீடா நகர சிறையில் 35 வயது பெண்கைதி, கொலைக்குற்றம் தொடர்பாக அடைக்கப்பட்டிருந்தார். நீண்ட காலமாக இவர் சிறையில் இருந்தாலும், சிறை அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றதாலும், சிறைக்குள் சுதந்திரமாக உலாவி வந்தார்.

கடந்த 20 ஆம்திகதி முதல் இந்தப் பெண் கைதியை காணவில்லை. சிறைக்கு வெளியே ஊழியர்கள் சிலர் பள்ளம் தோண்டிய போது சுரங்கம் காணப்பட்டது. அந்த சுரங்கம் சிறையின் சமையலறை வரை சென்றது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த சுரங்கத்துக்குள் தேக்கரண்டியும், முள்கரண்டியும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவைகளை வைத்துதான் அந்தப் பெண் கைதி தப்பித்திருக்கிறார் என சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அந்த பெண் கைதியை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# நாய்களுக்கு ஊதியம் நேபாளத்தில் புதுமை

(காத்மாண்டு)

அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கு சம்பளம் கிடைக்கும். இரவு காவல் காக்கும் நாய்களுக்குச் சம்பளம் உண்டா? ஆம். நேபாளத்தில் அலுவலகங்களில் காவல் காக்கும் நாய்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

நேபாள நாட்டில் ஜாபா மாவட்டத்தில் தாமக் நகரில் செயற்பட்டுவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளை தனது அலுவலக இரவு காவல் பணிக்காக நாய் ஒன்றை வைத்துள்ளது. அதற்கு மாத ஊதியமாக ஆயிரத்து 500 ரூபாய் செலவிடுகிறது.

பணியில் அமர்த்தப்பட்டு இரண்டு வாரங்கள் ஆன இந்த நாய் ஊழியர்களோடு பழகிவிட்டது.

இரவு நேரத்தில் ஊழியர்களைத் தவிர அன்னியர் யாரையும் அலுவலக வளாகத்தில் அனுமதிப்பது இல்லை.

சங்கத்தின் கிளை செயலர் லீலா கூர்கெய்ன் கூறுகையில்; இந்த தொகையை இந்த நாயின் உணவு மற்றும் மருத்துவச் செலவுக்குப் பயன்படுத்துகிறோம். தினமும் அரிசிச்சோறு, பால் கொடுக்கிறோம். வாரம் இரு முறை மாமிச உணவு அளிக்கிறோம் என்றார். (2-4-6)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 29

## மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

பின்பு கலிபிறந்து மூவாயிரத்து ஐந்நூற்று முப்பதாம் வருடம் குணசிங்கனின் புத்திரன் அதிசுதன் என்பவனுக்கு மண்முனையையும் இரு தினங்களில் பட்டங்கட்டினான். அதிசுதன் மனைவியின் நாமம் நாமவல்லி கனகசேனனுடைய மனைவி அருந்தாள். இவர்கள் இலங்கையில் உள்ளவர்கள். அவர்களின் சந்ததிகள் மட்டக்களப்பு மண்முனை இரு பகுதிகளையும் இருநூறு வருடங்களாக ஆண்டு வந்தனர்.




குணசிங்கன் சரித்திரம் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் ஒரு கதைபோலச் சொல்லப்படுகிறது. அதன் பிரதான அம்சங்கள் கீழ்வருவனவாகும்.

1. கலிவர்சம் 3500 இல் மட்டக்களப்பிலே குணசிங்கன் ஆட்சிபுரிந்தான்.

2. அக்காலத்தில் மேகவண்ணன் இலங்கை அரசனாக விளங்கினான்.





3. அவனது ஆட்சியில் உலகநாச்சி கலிங்கதேசத்துத் தந்த புரத்திலிருந்து புத்தரின் தந்ததாதுவினையும் சிவலிங்கத் தையும் கொண்டு வந்தாள்.

4. உலக நாச்சிக்கு மட்டக்களப்பில் நிரந்தரமாக நிலம் வழங்கப்பட்டது. அவள்குக் குடும்பங்களை வரவழைத்துக் காப்பு முனைக் காட்டிலே குடியேறினாள்.

5. உலகநாச்சி மண்முனைப் பகுதியில் அரசியானாள்.

6. கொக்கட்டிச் சோலையில் ஆலய தாபனஞ் செய்து அங்கே சேவை புரிவதற்குப் பட்டர் மாலைக்காரர் முதலியோரை வரவழைத்துக் குடியிருக்கச் செய்தாள்.

இந்தக் கதையில் மண்முனைப் பற்றில் ஏற்பட்ட குடியேற்றம் உலக நாச்சி குடியின் உற்பத்தி அக்குடியினர் மண்முனையில் ஆட்சியதிகாரம் பெற்றமை, கொக்கட்டிச் சோலைக் கோயிலின் உற்பத்தி முதலான விடயங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றில் உண்மையான விவரங்களும் உண்மைக்குப் புறம்பான விடயங்களும் கலந்து சொல்லப்படுகின்றன. உலகநாச்சி, குணசிங்கன் ஆகியோரின் காலம் மேக வண்ணனின் காலம் என்று சொல்லப்படுகின்றது. மகாவம்சத்திலுள்ள மன்னர் வம்சாவழியின் மேகவண்ண அபய என்பவன் மகாசேனனின் குமாரன். அவனுக்குப்பின் ஆட்சிபுரிந்தவன். அவனுடைய காலத்திலே தந்தபுரத்திலிருந்து தந்ததூதுவை கலிங்கதேசத்திலிருந்தும் கொண்டு வந்தனர். உலகநாச்சிக்கும் அதற்கும் எதுவிதமான தொடர்பும் இருப்பதாகக் கொள்ள முடியாது.

உலகநாச்சி பற்றிய கதை உலகிற்போடி குடியினரின் உற்பத்தியினையும் விளக்கும் முகமாக உருவாக்கப்பட்ட கதைகளைப் போலத் தெரிகின்றது. உலகிற் போடி குடி முக்குவர் குடிகளில் முதன்மை பெற்றிருந்தது. அக்குடியினர் மண்முனை முதலான பற்றுகளில் வன்னியங்களாய் இருந்தனர். கலிங்க தேசத்து தந்தபுரத்திலிருந்து உலகநாச்சிவந்தாள் என்பது பொருந்தாக்கூற்று. முக்குவர் மலையாள தேச உற்பத்தியுடையவர்கள். உலகநாச்சி மண்முனைப்பற்றி அரசியானாள் என்ற கதை மருமக்கள் தாயமுறையினைக் குறிப்பதாக அமையும். முக்குவர் வழமையில் உடைமைகள் சகோதரிகளுக்கு உரியவை. அவற்றை ஆண்சகோதரர்கள் அவர்களின் சார்பிலே பரிபாலனஞ் செய்வர். குணசிங்கனின் சகோதரனை உலக நாச்சி மணம் முடித் தாள் என்று சொல்லப்படுகின்றது. மண் முனை வன்னிபங்களும் மட்டக்களப்பு வன் னிபங்களும் சம்பந்தக் குடிகளாயிரத்தல் சாத்தியமான ஒன்றாகும். மண்முனைக் குடியேற்றம் மேக வண்ணனுடைய காலத்தில் ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது. என்ன அடிப்படையில் இவ்வாறு சொல்லப்படுகிறது என்பது தெரியவில்லை பொதுவாக அக்குடியேற்றங்கள் புராதனமானவை. அவை அநுராதபுர காலத்தில் இருந்து ஏற்பட்டவை என்ற கருத்தே இக் கதை மூலம் அழுத்தம் பெறுகின்றது. கொக்கட்டிச்சோலை கோயில் பற்றிய கதாம்சங்களில் ஆலயத்திற்கும் உலகப் போடி குடியினருக்கும் இடையிலுள்ள தொடர்புகள் பற்றிய குறிப்புகளே வரலாற்றுச் சார்புடையவை.



குணசிங்கன் சரித்திரம் என்று சொல் லப்படும் பகுதியிலுள்ள தனிப்பாடலுக்கும் வசன நடையிலே சொல்லப்படும் பகுதிக்கும் எதுவிதமாகன தொடர்புகளும் காணப்படவில்லை. எவ்வாறாயினும் குணசிங்கன் சரித்திரம் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தின் குணாம்சங்களை பிரதிபலிக்கும் பகுதிகளில்முக்கியமான ஒன்றாகும். அவற்றை எழுதியவர்கள் வரலாறு தெரிந்தவர்கள் அல் லர்: வரலாறு, புராணம், புனைக்கதை ஆகிய எல்லாம் கலந்துள்ள ஒரு மரபினைப் பதிவு செய்துள்ளனர். பூர்வ சரித்திரங்களை ஆராய்பவர்களுக்கு அந்த மரபினைப் பற்றிய புரிந்துணர்வு அவசியமான தேவையாகும்.

### மாகோனும் வன்னிமைகளும்

மாகோன் என்னும் அரசனொருவனைப் பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் நான்கு வேறான பகுதிகளிலே சொல்லப்படுகின்றது. முதன் முதலாக "தினசிங்கன் சரித்திரம்" என்னும் பகுதியில் அவனைப்பற்றி சொல்லப்படுகின்றது. மூன்றாவதாக குடிப்பிரிவுகள் பற்றிய பிரிவிற் சொல்லப்படுகின்றது. இறுதியாக குழிக் கல்வெட்டு முறை என்னும் பகுதியில் மாகோ னைப்பற்றி பேசப்படுகின்றது.

தினசிங்கன் சரித்திரத்தில் மாகோன் கலிங்க தேசத்திலிருந்தும் படையெடுத்து வந்ததாகச் சொல்லப் படுகின்றது. சமயத்தகராறுகள் உச் சக் கட்டத்தை அடைந் திருந்த சமயத் திலே சைவ சமயத்தை பாதுகாத்தற் பொருட்டு அவனை கலிங்கதேசராசன் அனுப்பிவைத்தான் என்று சொல்லப்படுகின்றது. இதனைப்பற்றிய கதையின் ஒரு பகுதி கீழ் வருமாறுள்ளது.

...கலிங்க தேசம் சென்ற வேவுகாரர் அந் நகரஞ் சேர்ந்து கலிங்க தேசத்தை அரசு புரியம் மனுவரதனிடம் கொடுத்து இருகரங்களையும் கூப்பி நின்றனர். மனுவ ரதனர் திருமுகத்தை வாசித்துத் தனது மூன்றாம் புத்திரன் மாகோனை அழைத்து சங்கற்பம் சுஹி இரண்டாயிரம் பேர் கொண்ட சைனியங் கொடுத்து இலங்கை முற்றிலும் தமிழ் மதம் வளரச் செய்து மட்டக் களப்பையும் சுகதிரனுக்குப் பட்டங் கட்டி வரும்படி திட்டஞ்செய்து அனுப்பி விட்டான்.

மாகோனும் படைவீரரும் வேவு காரம் யுத்தப் படகிலேறித்த தென் சமுத்திரம் சேர்ந்து மணிபுரத்தில் இறங்கி அந் நகரத்து நாகர்குல அரசனைக் கண்டு சோழன் செய்த நிபந்தனைகளை விசாரித்து மட்டக்களப்பில் வந்து கலிங்ககுலத்துச் சுபதிரனைக் கண்டு முகமன் கொண்டாடி விருந்துண்டு தினசிங்கன் மனைவி மக்கள் அவன் தம்பி முதலாகிய சந்ததிகள் யாவையும் தனது வாழுக்கிரையாக்கி சில சிங்கரையும் மட்டக் களப்பால் அகற்றிவிட்டு மட்டக் களப்பை தன் நிழலிலிருத்தி காலிங்க குல சுகதிரனுக்கு பட்டம் கட்டி பின்பு இலங்கை முற்றும் தன் கைவசப் படுத்தி தோப்பாவையிற்சென்று அணிகங்கன் என்பவனை வாழுக்கிரையாக்கி தோப்பாவையில் உள்ள புத்தவிகாரரை, புத்தாலயங்கள் எல்லாமிடிப்பித்துக் புத்த குருக்களை எல்லாம் தேடிப்பிடித்து சிறைப்படுத்திவைத்து இலங்கை முற்றுக்கும் தோப்பாவை இராச தானியாக்கிஅரசுசெய்து வாழுங்காலம்... மாகோனும் குலவரிசை ஏற்படுத்தி மட்டக் களப்பு முழுவதும் தமிழ் மதமே வளரச் செய்தான்.

பேராசிரியர்
சி.பத்மநாதன்

மாகோன் பற்றிய கதை அடுத்துவரும் "சுகதிரன் சரித்திரம்" என்னும் பகுதியிலே தொடருகிறது. அதில் முதலாவதாக வரும் தனிப்பாடல் கீழ்வருமாறு உள்ளது.

அணிகங்கரன் றனை வதைத்து
மாகோனால் அரசு பெற்று
ஆழிசூழும் மட்டுமன்னுங் களப்பு நாட்டைக்
கலியுதித்து நாலாயிரத்து இருநூற்று
ஐம்பதில் பரிவினோடு
மணிவயிரமுடி தரித்தான் மாகோனும்
புகழ்ந்திருக்க மனுக்கள் போற்ற
தணிகை வளர் குகநாடு தழைத்த தென்னக்
கழனிசெந்நெல் மேலோங்கித் தரித்ததன்றே

(தொடரும்)

---

# வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் பிரசாரம்

## அனோமா பொன்சேகா அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் தனது கணவருக்காக சென்று தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தீர்மானித்திருப்பதாக அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் தமது கணவர் எனவும் அவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் தேர்தல் பிரசாரங்களில் கலந்துகொள்ள முடியாது போயுள்ளதாகவும் அனோமா பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

நீதி நியாயம் மற்றும் உண்மையை நாட்டிற்குள் ஸ்தாபிப்பதற்காக நாடு முழுவதும் சென்று தனது கணவருக்காக மக்களைத் தெளிவுபடுத்த தீர்மானித்திருப்பதாகவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (ந-5)

---

# பொன்னாலையில் பழைய இடங்களுக்கு நகர்த்தப்படும் மின் மாற்றிகள்

(பொன்னாலை)

வலி. மேற்குப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் பாதுகாப்புக் கருதி இராணுவ நிலைகளுக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் அருகில் போடப்பட்ட மின்மாற்றிகள் பழைய இடங்களுக்கு நகர்த்தப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் இனந்தெரியாத நபர்கள் மின்மாற்றிகளை இலக்கு வைத்துத் தாக்கி வந்ததையடுத்தே இந்த மின் மாற்றிகள் இராணுவ மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு அண்மையில் மாற்றப்பட்டிருந்தன.

தற்போது சாதாரண சூழல் நிலவுவதையடுத்து இவ்வாறு மாற்றப்பட்ட மின் மாற்றிகள் மீண்டும் பழைய இடங்களுக்கு மாற்றப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-49)

# த.தே.வி. கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்

தமிழ் தேசிய விடுதலைக்கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக தமிழ் தேசிய விடுதலைக்கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான என். ஸ்ரீகாந்தா தெரிவித்தார். இதில் பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் முதலாவது பொதுக் கூட்டம் வட்டுக் கோட்டை தொகுதியில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந)

பேசாத பேச்சுக்கு நீ எஜமான்.
பேசிய வார்த்தை உனக்கு எஜமான்.
-இங்கிலாந்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பொய் சொல்லல் ஆகாது பாப்பா வேட்பாளர்கள் பொய் சொல்லலாகாது பாப்பா

'பொய் சொல்லல் ஆகாது பாப்பா வேட்பாளர்கள் பொய்சொல்லல் ஆகாது பாப்பா. வாக்காளரை ஏமாற்ற வேட்பாளர் பொய் சொல்லல் ஆகாது பாப்பா'

பாரதி இன்றிருந்தால் இப்படிதான் பாடியிருப்பார்.

பொய்சொல்ல்ல் ஆகாது பாப்பா என்று பாப்பாக்களுக்கு பாடம் சொல்லிய பாரதி, வேட்பாளர்களின் பொய்யுரை கண்டு கலங்கியிருப்பான்.

தேர்தலில் வாக்குக் கேட்பது, வாக்குறுதி வழங்குவது என்பன சாதாரண விடயமாகும்.

அதற்காக நான் நாடாளுமன்றம் சென்றால் 'தனிநாடு' பெற்றுத் தருவேன் என யாரேனும் கூறமுடியுமா? அவ்வாறு கூறினால் அதை நம்ப முடியுமா?

இதே போன்றுதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு தயாரிக்கப்பட்டு விட்டது.

நாங்கள் நாடாளுமன்றம் சென்றால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்ற வாக்குறுதியும் அமையும்.

யார் வேண்டுமானாலும் இப்பிரச்சினைக்குத் தீர்வு எழுதலாம்! தயாரிக்கலாம். ஆனால் அது அமுலாக வேண்டும் அல்லவா!

இலங்கையின் தற்போதைய அரசு அல்லது எதிர்காலத்தில் வேறுஒரு அரசு என எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வென்பது ஒரு போதும் சாத்தியமாகப் போவதில்லை.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஈழப்போராட்டம் ஆயுத ரீதியில் உச்சமடைந்த போது சாத்தியமாகியிருக்க வேண்டும். ஆனால் அது கைக்கெட்டாமல் போயிற்று.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிச் செல்வதன் மூலம் அடைய முடியும் எனக் கூறுவது மிகப்பெரும் தவறாகும்.

இத்தகைய பசப்பு வார்த்தைகள் தமிழ் மக்களை திரும்பத்திரும்ப ஏமாற்றும் வித்தையாகும். இதைத் தயவு செய்து எந்த வேட்பாளரும் பிரயோகிக்கக்கூடாது.

ஜனாதிபதி ஆட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதனைச் செய்யமுடியும் என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

எனவே மக்களுக்குத் தெரிந்த விடயங்களை அவர்களுக்குத் தெரியாதது போல நினைத்துக் கொண்டு பேசுவது அழகல்ல.

வேண்டுமாயின், நாய்த் தொல்லையை இல்லாது செய்வேன். பண்ணைப் பாலத்தை திருத்த நடவடிக்கை எடுப்பேன்.

குவிகின்ற குப்பைகளை அகற்ற வாகன வசதி செய்து கொடுப்பேன். அவ்வப்போது அவசர காலச்சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பேன். இவ்வாறு சொல்லுங்கள் அது போதும்.

இதைவிடுத்து 'தீர்வுத் திட்டம்' தயார் என்று சொல்வீர்களாயின் அது தொடர்பில் பல கேள்விகளை உரியவர்களிடம் பகிரங்கமாகக் கேட்க வேண்டியிருக்கும்.

# தேர்தலின் பின்பு விரிவான பொது எதிர்க்கட்சி கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது

## ரிவிர செய்தி வெளியிட்டுள்ளது

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் விரிவான பொது எதிர்க்கட்சி கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட உள்ளதாக ரிவிர பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கமைய தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக தேசிய முன்னணி உள்ளிட்டசில கட்சிகள் கூட்டாக இணைய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விரிவான எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்று உரு வாக்கப்பட வேண்டுமென கட்சியின் ஆதரவாளர்கள் விரும்புவதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அன்னப்பறவை சின்னத்தில் எவ்வாறு எதிர்க்கட்சிகள் இணைந்து செயற் பட்டனவோ அவ்வாறே எதிர்காலத்திலும் செயற்பட திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இவ்வாறான ஓர் இணக்கப்பாடு எட்டப்படக்கூடிய சாத்தியம் அதிகமாக காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட தலைவர் ஒரு வரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியை விடவும் கூடுதல் ஆசனங்கள் எதிர்க்கட்சிகளுக்கு காணப்பட்டால் இணக்கப்பாட்டுடன் கூடிய பொது அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் பின் நிற்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## சோமாலியாவில் கடத்தப்பட்ட இலங்கையர்களுக்கு ஆபத்தில்லை

### கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது

(கொழும்பு)

சோமாலியர் கடற்பரப்பில் கடத்தப்பட்ட கப்பலில் இருந்த 13 இலங்கையர்களும் பாதுகாப்பாக இருப்பதாக கடத்தப்பட்ட கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஜப்பானிலிருந்து மசகு எண்ணெய் ஏற்றிக்கொண்டு சவூதி சென்று கொண்டிருந்த கப்பல் சோமாலியக் கடற்பரப்பில் கடத்தப்பட்டது.

இந்தக் கப்பலின் கப்டன் உட்பட 14 சிப்பந்திகள் இருந்தனர். கப்டன் கியக் நாட்டைச் சேர்ந்தவர். ஏனைய 13 பேரும் இலங்கையர்கள். அவர்களின் பெயரை கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

யாக்கூப் சேவியர் ,வீனஸ் ரொபின்சன் , ஹேவா பதகே ரங்கா ஜயசிங்க , விஜயமுனி எல்மோ அன்சலாம் சொய்சா , செல்வராசா ராஜவேல், பாலகிருஷ்ணன் ஜயரஞ்சன் , ரொபேட் ஜோசப் , கனகசபாபதி துஷ்யந் தன் , அருமைசேகரம் பசில் ராஜா , லக்ஷ்மிகாந்தன் கஜேந்திரன் , ஆரோக்கியசாமி பிள்ளை பிரிட்டோலோரன்ஸ் , சவரிமுத்து அற்புதராஜா , ராஜ கோபால் ஜெயக்குமார் ஆகியோரே கப்பலில் உள்ளவர்களாவர்.

இவர்களை மீட்டெடுப்பதற்காக கடத்தல்காரர்களுடன் கப்பல் நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அறிவித்துள்ளது. (2-6)

## தேசிய அருங்கலைகள் பேரவையின் பயிற்சிப்பட்டறை நிகழ்வு

மாகாண மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவையினால் இந்த ஆண்டில் நடத்தப்படவுள்ள க்ண்காட்சிக்கு தயார்படுத்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி பட்டறைக்கு தொழிற்துறை திணைக்களத்தைச் சேர்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், சிறுகைத்தொழில் போதனாசிரியர்கள், பிரதேசங்களிலுள்ள திறமை வாய்ந்த கைவினைஞர்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர்கள், ஆகியோரை கலந்து கொள்ளுமாறு மாவட்ட அலுவலர் பொ. பௌராஜ் கேட்டுக்கொண்டுள்ளார். (2-30)

## ஒரே கட்சிக்குள் ஏற்படும் முறுகல்நிலை தவிர்க்கப்படவேண்டும்-பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரே கட்சிக்குள் ஏற்படும் முறுகல் நிலை தவிர்க்கப்பட வேண்டுமென பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒரே கட்சியைச் சேர்ந்த தரப்பினரே அதிகளவில் மோதிக் கொண்டுள்ளதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியின் போதே அதிகளவில் முரண்பாடுகள் வெடிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் மோதிக் கொள்வதனை தடுப்பதற்கு கட்சித் தலைமைத்துவங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தேர்தல் தினம் நெருங்கும் போது இந்த நிலைமை மேலும் மோசமடையக் கூடுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (2-4-6)

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மகளிர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையம் தேசிய சமாதானப் பேரவையுடன் இணைந்து நடத்தும் மகளிர் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

*நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான பெண்கள்* எனும் தொனிப்பொருளில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தீபிகா உடகம கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்,பெரிய கடை பள்ளிவாசல் மௌலவி மகரூட்,நாகவிகாரைத் தலைவர் மீககயடுறோ ஸ்ரீவிமலஹிம்ஸ்ரீ ஆகியோர் வழங்கவுள்ளதுடன் தேசிய சமாதானப் பேரவைப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா ,மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சறோஜா சிவச்சந்திரன், தேசிய சமாதானப் பேரவையின் பிரதான நிர்வாக அதிகாரி திருமதி றெஜினா இராமலிங்கம், வண.பிரவீன் அடிகளார், சுவியான் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் 500ற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு தாம் சந்தித்த அனுபவங்களையும் சாதித்த சாதனைகளையும் எடுத்துக்காட்டவுள்ளதோடு யாழ்ப்பாணத்தில் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக இம் மாநாட்டில் சிபார்சு செய்யப்பட்ட விடயங்களை பிரதான அதிகாரிகளுக்கு கையளிக்கப்படவுள்ளது.

மேலும் இத்தினம் ஓர் தேசிய விடுதலை தினமாக அறிவிக்கப்படவேண்டும் என்றும் கோசம் எழுப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மதமும் ஒழுக்கமும்




உன்னிடமுள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக்கூடியது தான் நல்லொழுக்கமாகும். உன்னிடமுள்ள மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வதே தீய ஒழுக்கம்.மிருக இயல்பை உன் னிடமிருந்து அழித்து விட்டு மனிதத்தன்மை கொண்டவனாக நீ மாற வேண்டும்.

அதாவது அன்புள்ளமும் தர்ம சிந்தனையும் உடையவனாக இருக்க வேண்டும்.

பிறகு நீ அந்த நிலையையுங்கூடக் கடந்து சென்று தூய ஸத்-சித் ஆனந்தமாக ஆகவேண்டும். சுடும் தன்மை இல்லாத நெருப்பாகவும் அற்புதமான அன்புள்ளவனாகவும் ஆனால் அதே சமயத்தில் பாமர மனிதனின் உணர்ச்சி வசப்பட்ட அன்பு என்ற பலவீனத்திற்கும் துன்ப உணர்ச்சிக்கும் உட்படாதவனாகவும் நீ ஆக வேண்டும்.





மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று விடுதி திறப்பு விழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர். இரவீந்திரன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. ஈ. ஞானசோதி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. கேதீஸ்வரன், யாழ். மலேரியா தடை பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. ரீ. சிவபாதம், கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ். குகனேசன் ஆகியோர் நிற்பதையும் இவ்விடுதியை குறிப்பிட்ட காலத்தில் கட்டி முடித்த M.R.E.S. கட்டட ஒப்பந்தகாரருக்கு பிரதம பொறியியலாளர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# எதிர்வரும் பொதுத் தேர்தல் மும்முனைப் போட்டியாக அமையும்

## இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஆரூடம்

எதிர்வரும் பொதுத் தேர்தல் ஒரு மும்முனை மோதலாக அமையும் என இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார். இணையத் தளம் ஒன்றுக்கு அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றிருந்தமை அவரது ஜனரஞ்சகத்தைப் பறைசாற்றுகிறது. அதன் பிரதி பலன் இந்தப் பொதுத் தேர்தலிலும் வெற்றியின் விளிம்பு வரையில் அவரை எடுத்துச் செல்லும். எனினும் தனித்தனியான வேட்பாளர்களின் போட்டியிடல் என்பது அவரவர்களின் வாக்கு வங்கிகளின் அடிப்படையில் தீர்மானம் மிக்க விடயமாகிறது.

இந்த நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணி மாத்திரம் இன்றி ஜே.வி.பி.யும் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கியுள்ளமை சவாலான விடயமாக காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஜெனரல் சரத் பொன்சேகா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மீதுள்ள அபிமானத்தையும் மீறி வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர். இந்த நிலையில் அவரது தலைமையின் கீழ் உள்ள ஜனநாயக தேசிய கூட்டமைப்பு முன்றாவது பலமிக்க போட்டியாளராக காணப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் வெளிநாடுகளில் உள்ள இலங்கை புலம் பெயர்ந்த தமிழர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அழிந்ததன் பின்னர் அவர்களின் கொள்கைகளின் பின்னால் செயற்படுவது எந்தப் பலனையும் தரப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அண்மையில் பிரித்தானியாவில் இடம்பெற்ற உலகத் தமிழ் மாநாடு குறித்து அவரிடம் கேள்வி எழுப்பிய போது அது தனியான தமிழீழ விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சி நிரல என தெரிவித்துள்ளார். அதனால் பயன் ஒன்றும் இல்லை என தெரிவித்த அவர், வெறும் இனவாதத்தின் அடிப்படையிலேயே அது மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர் தற்போது நாளொன்றுக்கு 10 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் முகாம்களில் இருந்து மீள் குடியேற்றப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். தற்போது சுமார் 65ஆயிரம் பேர் மாத்திரமே முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். எனினும் அவர்களின் சுதந்திரங்களுக்கு அப்பாற்பட்டு அவர்கள் தடுத்து வைக்கப்படவில்லை என தெரிவித்த அவர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையிலானவர்கள் மாத்திரம் பலர் கைது செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கைதானவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளின் பின்னர் அவர்களின் விடுதலை தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தற்போது புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்ற முன்னாள் விடுதலைப்புலிகளின் போராளிகள் மீண்டும் விடுதலைப் புலிகளின் கோட்பாடுகளின் கீழ் செல்லாது இருக்கும் வகையில் பயிற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## சந்தையில்லாத பகுதிகளில் மரக்கறி வியாபாரம் அதிகரிப்பு

யாழ். நகரப் பகுதியில் பலசரக்கு நிலையங்கள், பொது இடங்களில் வைத்து சந்தைப் பொருட்கள் சில விற்பனை செய்யப்பட்டு வரும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக வீதியோரங்களில் மரக்கறி வியாபாரங்கள் அதிகரித்து வருகின்றது.

இதனால் சந்தைக்கு வரும் நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் நாட்டம் குறைவாக இருப்பதனால் தமது வியாபார நடவடிக்கைகளில் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக யாழ். சந்தை வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக உரியவர்கள் கவனம் செலுத்தும்படி கோரிக்கை விடுக்கின்றனர். (2-30)

## நீரில் மூழ்கி மூவர் பலி

### தம்புள்ளவில் சம்பவம்

தம்புள்ள இம்மன்கொட்டுவ என்ற இடத்தில் குளத்தில் மூழ்கி மூவர் பலியாகியுள்ளனர். மரணமடைந்தவர்கள் கொழும்பு, கம்பஹா பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


நேற்று முன்தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலங்கள் தம்புள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (2-6)

## ஊனமுற்ற முன்னாள் புலி உறுப்பினரை உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊனமுற்ற முன்னாள் போராளிகளில் 500 பேர் எதிர்வரும் தினங்களில் உறவினர்களிடம் ஒப்படைக்கவுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட இணைப்பாளர் கீதாஞ்சலி தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் வவுனியா அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் தற்போது இருப்பவர்கள் என்றும் அனைவரும் இன்னும் சில தினங்களில் ஒப்படைக்கப்பட விருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-6)



யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் இலவச பாட நூலைத் தரமான முறையில் பேணிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் எஸ். சிவகரன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் வித்தியாலய அதிபர் ந. சிவகடாட்சம் மற்றும் ஆசிரியை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## ஐந்து ஆண்டுக்குள் தனிநபர் வருமானம் 4 ஆயிரம் அமெரிக்க டொலராக உயரும்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டின் தனிநபர் வருமானம் 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களாக உயரும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறுகிறார்.

மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு செயற்றிட்டத்தின் முக்கியமான இலக்கு இதுவாகும் என்று தேசிய செய்தி சேவைக்கு வழங்கிய செய்திக் குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டின் தனிநபர் வருமானம் 2 ஆயிரம் அமெரிக்க டொலராக உள்ளது. இலங்கையை ஆசியாவின் ஐஸ்வர்யம் மிக்க நாடாக மாற்றுவதற்கு மகிந்த சிந்தனையின் செயற்றிட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு பொதுமக்களின் அர்ப்பணிப்பும் அத்தியவசியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

(2-4)

# 2010 ஐ.பி.எல்.தொடர் நேர அட்டவணை

மூன்றாவது இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) இருபது-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகின்றது. இந்திய கிரிக்கெட் சபையினால் உருவாக்கப்பட்ட ஐ.பி.எல் அமைப்பின் 8 அணிகள் மோதும் இத் தொடரில் பல நாடுகளின் தேசிய கிரிக்கெட் அணி வீரர்கள் பங்குபற்றுகின்றனர். இத் தொடரில் நேர அட்டவணை வருமாறு,

| திகதி | அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| மார்ச் 12 | டெக்கான் சார்ஜர்ஸ்–கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | நவி மும்பை | இரவு 8 மணி |
| மார்ச் 13 | மும்பை இந்தியன்ஸ்–ராஜஸ்தான் றோயல்ஸ் | மும்பை | மாலை 3 மணி |
| மார்ச் 13 | கிங்ஸ் லெவின் பஞ்சாப்–டில்லி டேர்டேவில்ஸ் | மொகாலி | இரவு 8 மணி |
| மார்ச் 14 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | கொல்கத்தா | மாலை 4 மணி |
| மார்ச் 14 | சென்னை சுப்பர் கிங்ஸ்–டெக்கான் சார்ஜர்ஸ் | சென்னை | இரவு 8 மணி |
| மார்ச் 15 | ராஜஸ்தான் றோயல்ஸ்–டில்லி டேர்டேவில்ஸ் | அகமதாபாத் | இரவு 8 மணி |
| மார்ச் 16 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | பெங்களூர் | மாலை 4 மணி |
| மார்ச் 16 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–சென்னை சுப்பர் கிங்ஸ் | கொல்கத்தா | இரவு 8 மணி |
| மார்ச் 17 | டில்லி டேர்டேவில்ஸ்–மும்பை இந்தியன்ஸ் | டில்லி | இரவு 8 மணி |
| மார்ச் 18 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்–ராஜஸ்தான் றோயல்ஸ் | பெங்களூர் | இரவு 8 மணி |
| மார்ச் 19 | டில்லி டேர்டேவில்ஸ்–சென்னை சுப்பர் கிங்ஸ் | டில்லி | மாலை 4 மணி |
| மார்ச் 19 | டெக்கான் சார்ஜர்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | நாக்பூர் | இரவு 8 மணி |
| மார்ச் 20 | ராஜஸ்தான் றோயல்ஸ்–கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | அகமதாபாத் | மாலை 4 மணி |
| மார்ச் 20 | மும்பை இந்தியன்ஸ்–பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | மும்பை | இரவு 8 மணி |
| மார்ச் 21 | டெக்கான் சார்ஜர்ஸ்–டில்லி டேர்டேவில்ஸ் | நாக்பூர் | மாலை 4 மணி |
| மார்ச் 21 | சென்னை சுப்பர் கிங்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | சென்னை | இரவு 8 மணி |
| மார்ச் 22 | மும்பை இந்தியன்ஸ்–கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | மும்பை | இரவு 8 மணி |
| மார்ச் 23 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்–சென்னை சுப்பர் கிங்ஸ் | பெங்களூர் | இரவு 8 மணி |
| மார்ச் 24 | கிங்ஸ் லெவின் பஞ்சாப்–ராஜஸ்தான் றோயல்ஸ் | மொகாலி | இரவு 8 மணி |
| மார்ச் 25 | மும்பை இந்தியன்ஸ்–சென்னை சுப்பர் கிங்ஸ் | மும்பை | இரவு 8 மணி |
| மார்ச் 26 | ராஜஸ்தான் றோயல்ஸ்–டெக்கான் சார்ஜர்ஸ் | அகமதாபாத் | இரவு 8 மணி |
| மார்ச் 27 | கிங்ஸ் லெவின் பஞ்சாப்–கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | மொகாலி | மாலை 4 மணி |
| மார்ச் 27 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்–டில்லி டேர்டேவில்ஸ் | பெங்களூர் | இரவு 8 மணி |
| மார்ச் 28 | ராஜஸ்தான் றோயல்ஸ்–சென்னை சுப்பர் கிங்ஸ் | அகமதாபாத் | மாலை 4 மணி |
| மார்ச் 28 | டெக்கான் சார்ஜர்ஸ்–மும்பை இந்தியன்ஸ் | நாக்பூர் | இரவு 8 மணி |
| மார்ச் 29 | டில்லி டேர்டேவில்ஸ்–கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | டில்லி | இரவு 8 மணி |
| மார்ச் 30 | மும்பை இந்தியன்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | மும்பை | இரவு 8 மணி |
| மார்ச் 31 | சென்னை சுப்பர் கிங்ஸ்–பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | சென்னை | மாலை 4 மணி |
| மார்ச் 31 | டில்லி டேர்டேவில்ஸ்–ராஜஸ்தான் றோயல்ஸ் | டில்லி | இரவு 8 மணி |
| ஏப் 1 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–டெக்கான் சார்ஜர்ஸ் | கொல்கத்தா | இரவு 8 மணி |
| ஏப் 2 | கிங்ஸ் லெவின் பஞ்சாப்–பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | மொகாலி | இரவு 8 மணி |
| ஏப் 3 | சென்னை சுப்பர் கிங்ஸ்–ராஜஸ்தான் றோயல்ஸ் | சென்னை | மாலை 4 மணி |
| ஏப் 3 | மும்பை இந்தியன்ஸ்–டெக்கான் சார்ஜர்ஸ் | மும்பை | இரவு 8 மணி |
| ஏப் 4 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | கொல்கத்தா | மாலை 4 மணி |
| ஏப் 4 | டில்லி டேர்டேவில்ஸ்–பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | டில்லி | இரவு 8 மணி |
| ஏப் 5 | டெக்கான் சார்ஜர்ஸ்–ராஜஸ்தான் றோயல்ஸ் | நவி மும்பை | இரவு 8 மணி |
| ஏப் 6 | சென்னை சுப்பர் கிங்ஸ்–மும்பை இந்தியன்ஸ் | சென்னை | இரவு 8 மணி |
| ஏப் 7 | ராஜஸ்தான் றோயல்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | ஜெய்ப்பூர் | மாலை 4 மணி |
| ஏப் 7 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–டில்லி டேர்டேவில்ஸ் | கொல்கத்தா | இரவு 8 மணி |
| ஏப் 8 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்–டெக்கான் சார்ஜர்ஸ் | பெங்களூர் | இரவு 8 மணி |
| ஏப் 9 | கிங்ஸ் லெவின் பஞ்சாப்–மும்பை இந்தியன்ஸ் | மொகாலி | இரவு 8 மணி |
| ஏப் 10 | டெக்கான் சார்ஜர்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | நவி மும்பை | மாலை 4 மணி |
| ஏப் 10 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்–கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | பெங்களூர் | இரவு 8 மணி |
| ஏப் 11 | டில்லி டேர்டேவில்ஸ்–கிங்ஸ் லெவின் பஞ்சாப் | டில்லி | மாலை 4 மணி |
| ஏப் 11 | ராஜஸ்தான் றோயல்ஸ்–மும்பை இந்தியன்ஸ் | ஜெய்ப்பூர் | இரவு 8 மணி |
| ஏப் 12 | டெக்கான் சார்ஜர்ஸ்–பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | நவிமும்பை | இரவு 8 மணி |
| ஏப் 13 | மும்பை இந்தியன்ஸ்–டில்லி டேர்டேவில்ஸ் | மும்பை | மாலை 4 மணி |
| ஏப் 13 | சென்னை சுப்பர் கிங்ஸ்–கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | சென்னை | இரவு 8 மணி |
| ஏப் 14 | ராஜஸ்தான் றோயல்ஸ்–பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | ஜெய்ப்பூர் | இரவு 8 மணி |
| ஏப் 15 | சென்னை சுப்பர் கிங்ஸ்–டில்லி டேர்டேவில்ஸ் | சென்னை | இரவு 8 மணி |
| ஏப் 16 | கிங்ஸ் லெவின் பஞ்சாப்–டெக்கான் சார்ஜர்ஸ் | தரம்சாலா | இரவு 8 மணி |
| ஏப் 17 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்–மும்பை இந்தியன்ஸ் | பெங்களூர் | மாலை 4 மணி |
| ஏப் 17 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–ராஜஸ்தான் றோயல்ஸ் | கொல்கத்தா | இரவு 8 மணி |
| ஏப் 18 | கிங்ஸ் லெவின் பஞ்சாப்–சென்னை சுப்பர் கிங்ஸ் | தரம்சாலா | மாலை 4 மணி |
| ஏப் 18 | டில்லி டேர்டேவில்ஸ்–டெக்கான் சார்ஜர்ஸ் | டில்லி | இரவு 8 மணி |
| ஏப் 19 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ்–மும்பை இந்தியன்ஸ் | கொல்கத்தா | இரவு 8 மணி |
| ஏப் 21 | முதல் அரையிறுதி | பெங்களூர் | இரவு 8 மணி |
| ஏப் 22 | இரண்டாவது அரையிறுதி | பெங்களூர் | இரவு 8 மணி |
| ஏப் 24 | மூன்றாவது இடத்திற்கான போட்டி | நவி மும்பை | இரவு 8 மணி |
| ஏப் 25 | இறுதிப் போட்டி | நவி மும்பை | இரவு 8 மணி |

# ஹயில், டியோனரின் அசத்தல்; மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி

(கயானா)

அணித்தலைவர் ஹயில், டியோனரினின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சிம்பாபே அணியை வீழ்த்தி தொடரை 1:1 என்ற கணக்கில் சமநிலையாக்கியது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாபே அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி, 5ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஒரேஒரு இருபது-20 போட்டியில் வெற்றிபெற்ற சிம்பாபே அணி தொடர்ந்து நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்று தொடரில் 1:0என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இந்நிலையில் இரண்டாவது ஒரு நாள் போட்டி நேற்றுமுன்தினம் குயானாவில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாபே அணி 49.5 ஓவர்களில் 206ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் சிக்கும்புரா 72பந்துகளில் (5பவுண்டரிகள் உட்பட) 50ஓட்டங்களையும், ரெய்லர் 47 ஓட்டங்களையும், தைபு 31, லாம்ப் 23ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மில்லர் 4விக்கெட்டுக்களையும், ரோஷ் 3விக்கெட்டுக்களையும், ஹயில் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50ஓவர்களில் 207 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஹயில், பியோனரினின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 47.5ஓவர்களில் 6விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 208ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதில் அணித் தலைவர் கிறிஸ் ஹயில் 111 பந்துகளில் (7பவுண்டரி கள்;2சிக்ஸ்சர்கள் உட்பட) 88ஓட்டங்களையும், டியோணரின் ஆட்டமிழக்காமல் 85பந்துகளில் (6பவுண் டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 65ஓட்டங்களையும்எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரீஸ், கிரீமர் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும், லாம்ப், ரெய்லர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த டியோனரின் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் மேற் கிந்தியத் தீவுகள் அணி 5போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலைப்படுத்தியது.

# உலகக் கிண்ண ஹொக்கித் தொடரில் அரையிறுதி வாய்ப்பையிழந்தது இந்தியா

(புதுடில்லி)

உலக கோப்பை ஹொக்கி தொடரின் மிக முக்கியமான லீக் போட்டியில் இந்திய அணி, இங்கிலாந்திடம் 2-3 என்ற கோல் கணக்கில் பரிதாபமாக தோல்வி அடைந்தது. இதன் மூலம் அரையிறுதிக்கு முன்னேற்றும் கனவு தகர்ந்தது.

ஏற்கனவே அவுஸ்திரேலியா, ஸ்பெயினிடம் வீழ்ந்த இந்தியா, ஹட்ரிக் தோல்வியை சந்தித்தது. வரிசையாக நான்கு போட்டிகளில் வென்ற இங்கிலாந்து அணி (12 புள்ளி) அரையிறுதிக்கு இலகுவாக



முன்னேறியது.

டில்லி தயான்சந்த் தேசிய மைதானத்தில் 12ஆவது உலக கோப்பை ஹொக்கி தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் பி பிரிவில் நடந்த லீக் போட்டியில் இந்திய அணி ஐரோப்பிய சாம்பியன் இங்கிலாந்தை சந்தித்தது. இப்போட்டியில் வென்றாக வேண் டிய கட்டாயத்தில் இந்தியா களமிறங்கியது. ஆட்டம் ஆரம்பமாகியதில் இருந்தே இங்கிலாந்து ஆதிக்கம் செலுத்தியது.

14ஆவது நிமிடத்தில் சந்தீப் சங்கின் ஹொக்கி ஸ்டிக் பட்டு இயான் மெக்கே காயமடைந்தார். இதிலிருந்து இங்கிலாந்து அணி விரைவாக மீண்டது. 16ஆவது நிமிடத்தில் நிக் கேடலின் அடித்த பந்தை பெற்ற ஜேம்ஸ் டிண்டால், அப்படியே கோல் போஸ்டுக்குள் தள்ளி விட இங்கிலாந்து அணி 1-0 என முன்னிலை பெற்றது. 33ஆவது நிமிடத்தில் பெனால்டிகோர்னர் வாய்ப்பை இந்தியாவின் திவாகர் வீணாக்கினார். முதல் பாதி முடிவில் இங்கிலாந்தின் முன்னிலை நீடித்தது.

**தற்காப்பு பலவீனம்**

இரண்டாவது பாதியின் ஆரம்பத்தில் இந்திய வீரர்கள் சொதப்பினர். முன்கள வீரர்கள் விரைவாக ஓடி கோல் அடிக்க முடியாமல் திணறினர். தற்காப்பு பகுதி வீரர்கள் படு மந்தமாக செயல்பட, இங்கிலாந்து அணியினர் மிக எளிதாக கோல் அடிக்க முன்னேறிச் சென்றனர்.

42ஆவது நிமிடத்தில் பெனால்டிகோர்னர் மூலம் ஆஷ்லி ஜாக்சன் அருமையான கோல் அடித்தார்.

இந்த அதிர்ச்சியில் இருந்து இந்தியா மீள்வதற்குள் 47ஆவது நிமிடத்தில் ஆஷ்லி ஜான்சன் இம்முறை பீல்டு கோல் அடிக்க, இங்கிலாந்து 3-0 என முன்னிலை பெற்றது.

**போராட்டம் வீண்**

இதற்குப் பின் இந்திய வீரர்கள் துணிச்சலாக போராடினர். 54 ஆவது நிமிடத்தில் குர்விந்தர் சிங் சாண்டி ஒரு பீல்டு கோல் அடித்தார். பின் 58ஆவது நிமிடத்தில் அணித் தலைவர் ராஜ்பால் சிங் ஒரு கோல் அடிக்க, போட்டியில் டென்ஷன் ஏற்பட்டது. இந்த நேரத்தில் முரட்டுத்தனமாக ஆடிய சர்தார் சிங் (66 ஆவது நிமிடம்), குர்பஜ் சிங் (69) ஆகியோர் மஞ்சள் அட்டை பெற்று வெளியேற, இந்தியா 9 பேருடன் விளையாடும் நிலைமைக்கு தள்ளப்பட்டது. கடைசி நிமிடத்தில் ராஜ்பால் சிங் கோல் வாய்ப்பை நழுவ விட, இந்திய அணி 2-3 என்ற கணக்கில் தோல்வி அடைந்து, அரையிறுதி வாய்ப்பை கோட்டைவிட்டது.

## A/Lவரலாறு

M.பத்மன் B.A (Hons) His.sp/M.A
(யாழின் பிரபல ஆசிரியர்)
A/L 2012,2011 Day class அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

DMI
யாழ்ப்பாணம்

(848)


## ஜெனரல்...

மகள்மாருடன் உரையாடுவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை நிறைவேறும் வரை சாகும் வரை உண்ணாவிரதத்தினை ஜெனரல் சரத் பொன்சேகா தொடரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வடக்கு-கிழக்குக்கு அதிகாரம்...

புதிய அரசியல் யாப்பினை தயாரித்துள்ளது. இதனை எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நடைமுறைப் படுத்தப்போவதாக ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனை பொதுத் தேர் தலுக்கு முன்னர் அரசு அரசியல் யாப்பை வெளிப்படுத்த வேண்டும்.

இந்த அரசியல்யாப்பிலே வடக்குக் கிழக்குக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுதல் உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரப் பகிர்வு உள்ளடக்கப்பட்ட அரசியல் யாப்பு இந்திய அரசின் அழுத்தத்தினாலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் முகமாகவே இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார். (ச-5)


## தமிழர் விடுதலைக் கூட்டணி





வீ.ஆனந்தசங்கரி

வெற்றுக் கோசங்கள் வேண்டாம்

எழாலை த.திருஞானசம்பந்தர் J.P
(Ret. Station Master)

X 1

வீழ்ந்த மக்களுக்கு கரம் கொடுப்போம்

X 3

(809)


## ஜனாதிபதி மகிந்தவின் மீள்...

வெளிநாட்டமைச்சின் செயலாளர் றொமேஷ் ஜயசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க,மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரும் உடனிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை பிரதமர் மன்மோகன் சிங் எதிர்பார்த்திருப்பதாக இந்திய வெளிவிவகாரச்செயலாளர் நிருபமா ராவ் இலங்கை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே பிரதமர் மன்மோகன் சிங்கின் விருப்பம் குறித்து தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்த நிருபமா ராவ் தான் உயர்ஸ்தானிகராக இருந்த காலத்தை விட தற்போது இலங்கையின் முன்னேற்றங்களுக்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதை அவதானித்ததாகவும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மீள் வெற்றியானது நம்பிக்கையைத் தந்திருப்பதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளதாக இச்சந்திப்பில் நிருபமாராவ் தெரிவித் துள்ளதாக ஜனாதிபதிச் செயலகம் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பு குறித்து இலங்கையின் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கு உட்பட ஆயிரக்கணக்கான வேட்பாளர்கள் போட்டியிடுவது அவர்களுக்கு ஜனநாயகத்தின் மீது இருக்கின்ற ஆர்வத்தைக் காட்டுவதாகவும் இத்தகைய போக்கு இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் எனவும் நிருபமா ராவ் குறிப்பிட்டார்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்திய பின்னர் நாடு தழுவிய ரீதியில் நடத்தப்படும் பொதுத் தேர்தலில் பங்குபற்றுவதற்கு மக்கள் ஆர்வமுடன் முனைப்புக்காட்டி வருவதாகவும், வட க்கு-கிழக்கு உட் பட இத்தேர்தலில் வெற்றியீட்டுவார்கள் என எதிர்பார்க் கின்ற பல புதிய முகங்களுடன் பணியாற்று வதை தான் எதிர்பார்த் திருப்பதாகவும் ஜனாதிபதி நிருபமா ராவிடம் தெரிவித்துள்ளார். போரினால் இடம் பெயர்ந்துநலன்புரி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் மீளக் குடியமர்த்தி இருப்பது குறித்து நிருபமா ராவ் திருப்தி கொண்டுள்ளதாகவும் இத்தகைய மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் எனவும் நிருபமாராவ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்குக்கான புகையிரதப் பாதைகளுக்கான கட்டுமானப் பணிகளை மேற் கொள்வதற்கும் இந்தியா உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் நிருபமா ராவ் குறிப் பிட்டார்.

இலங்கை உறுதியளித்தபடி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வினை உடனடியாக முன்வைக்கும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் வலியுறுத்து வார் என டில்லி வட் டாரங்கள் தெரிவித் திருந்த போதிலும் அதுகுறித்த விபரங்கள் ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில்எதுவும்குறிப் பிடப் பட்டிருக்க வில்லை. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இரண்டாவது தடவைதெரிவு செய்யப்பட்டபின் விஜயம் செய்யும் முதல் இந்திய உயர்மட்ட அதிகாரி நிருபமாராவ் ஆவார் (ச-3 5,9)


## காட்சியறைக்கான

### காணி அல்லது கட்டிடம் வாடகைக்கு அல்லது கொள்வனவிற்கு தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.

பிரதான பாதைக்கு அகன்ற முகப்பைக்கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

கட்டிடமாயின் 7500 ச.அடி நில அளவு கொண்டதாகவும் வசதியான வாகனத்தரிப்பிடம் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

நிலமாயின் குறைந்தது 40பர்ச்சஸ் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

வினோத் 077 3746648
புத்திக 077 2932662

(845)



## யாழ். மாவட்ட கேபிள் TV இயக்குனர் சங்கம்

### அவசர கலந்துரையாடல்

இடம்: JAFFNA TECHNICAL INSTITUTE
CLOCK TOWER ROAD
(பெருமாள் கோவில் வீதி), யாழ்ப்பாணம்.

நேரம்: 09.03.2010 மாலை 3.00 மணி

எமது சங்கத்திற்கு கேபிள் TV இயக்குவதற்குரிய அனுமதிப் பத்திரம் கிடைக்கும் ஏது நிலை உருவாகி இருப்பதால் அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் உங்கள் ஏரியா, சங்கத்தில் உங்கள் அங்கத்துவம் என்பன உறுதி செய்ய வேண்டியுள்ளதாலும் அன்றைய தினம் மேன்மை தங்கிய அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அனைவரையும் மாலை 5 மணிக்கு சந்திக்க நேரம் ஒதுக்கி தந்துள்ளமையாலும் தவறாது சங்க கூட்டத்திலும் அமைச்சருடனான சந்திப்பிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு: 0777710785, 0718561654, 0775284689

(சி-4612)


## நாடுகடந்த...

தீர்வுத்திட்டமே உகந்த வழியாக கருதுவதாகவும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை இலங்கைக்கான விஜயத் தை மேற்கொண்ட இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் எதிர்க் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய வற்றுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

பல விடயங்கள் குறித்து கலந்துரையாடல் களை நிருபமா ராவ் மேற்கொள்ள விருப்ப தாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

குறிப்பாக இந்த சந்திப்பின் போது 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வு என்பது சாத்தியப்பாடற்றது என்றும், வடக்குக் கிழக்கு இணைந்த பிரதேசத்தை உள்ளடக்கி தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தீர்வினை பெறு வதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வலியுறுத்தவுள்ளதாக கூட்டமைப்புத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)



## IELTS

**BEFORE ATTENDING CLASSES FOR IELTS CHECK THE FOLLOWING**

* Whether the tutes and study materials used are recommended by IELTS Examination Board
* Qualifications & experience of teachers
* Pass rate of the past students

**We Provide**

* A placement test which determines to which level of English you belong
* Updated course modules
* Materials approved by British Council which are quite new including Cambridge7
* 40 Practice test
* Free IELTS pack & Mock Exams





**British Council IELTS Registration Centre**

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து இங்கு பரீட்சை எடுக்கமுடியும்.

| Course Schedule | Mon - Wed - Fri | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 10 weeks | 10 weeks |
| Time | 03.00 p.m - 05.00 p.m | 08.30 a.m - 11.30 a.m |
| Commencement | 15th March 2010 | 13th March 2010 |

Cambridge 7 New @ British College



வகுப்புக்கள் 13.03.2010 இல் ஆரம்பம்.

BRITISH COLLEGE OF ENGLISH

143,Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0213216027 - 0778803887


இப்பத்திரிகை வலம்புரி சீலன். கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.